மலர்-5 இதழ்-127 டிசம்பர் 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play




சபரிமலையில் கல்லாக மாறிய கன்னிப்பெண்

ஜனன ஜாதகத்தில் பிரச்சனையா
மனம் மற்றும் உடல் பிரச்சனையா

# உழவாரபணி தீர்வு தரும்



# ராகுகால பூஜை

எந்த ஒரு நல்ல காரியம் செய்யும் போதும் ராகுகாலம், எமகண்டம் போன்றவற்றை பார்த்து பார்த்து செய்வது வழக்கம்.

இவ்வாறு நாம் பார்க்கும் கால நேரங்கள் நமது ராசி, அதிர்ஷ்டம் போன்றவற்றுடன் சேர்ந்து பல்வேறு வெற்றி கிடைக்க வழிவகை செய்யும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தவகையில் ராகுகாலத்தில் பொதுவாக எந்த காரியத்தையும் செய்வதில்லை. ஆனால் அந்த நேரத்தில் இறை நம்பிக்கையுடன் ராகு கால பூஜை செய்யும்போது கிரக மற்றும் கெடு தல் சக்திகளிலிருந்து விடுபடலாம் என்று முன்னோர்கள் வகுத்த பூஜைதான் ராகுகால பூஜையாகும்.

ராகு கால நேரம் என்பது வாரத்தில் அனைத்து நாட்களிலும் உண்டு. ராகு கால பூஜை என்பது என்ன, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்று அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

செவ்வாய் கிழமை மற்றும் வியாழக் கிழமைகளில் செய்யப்படும் ராகு கால பூஜை மிகவும் சிறப்பானது.

இதைத்தவிர மற்ற நாட்களிலும் ராகு கால பூஜை செய்யலாம். ஒவ்வொரு கிழமைகளில் ஒவ்வொரு விதமான மலர்களைக் கொண்டு பூஜை செய்வது வாழ்வில் நிம்மதியும் வளங்களும் பெருகும்.

சூரிய கிரகத்துக்கு ஞாயிற்று கிழமைகளில் பாரிஜாதம் மற்றும் வில்வ மலர்களைக் கொண்டு பூஜை

சந்திர கிரகத்துக்கு திங்கள் கிழமை களில் வெள்ளை அலரி மலர் கொண்டு பூஜை

செவ்வாய் கிரகத்துக்கு செவ்வாய் கிழமைகளில் செவ்வரளி, செந்தாமரை மற்றும் செம்பருதி மலர் கொண்டு ராகு கால பூஜை செய்வது செவ்வாய் தோஷம் விலகும்.

புதன் கிரகத்துக்கு புதன் கிழமை களில் துளசி கொண்டு பூஜிக்கலாம்.

வியாழக் கிழமைகளில் குரு கிரகத்துக்கு மஞ்சள் நிற மலர்கள் மற்றும் சாமந்தி மலர் கொண்டு பூஜை செய்யவேண்டும்.

சுக்கிரனுக்கு வெள்ளிக் கிழமைகளில் வெள்ளை அரளி கொண்டு பூஜை செய்யலாம்.

சனி பகவானுக்கு சனிக் கிழமைகளில் நீல நிற சங்கு மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

மேற் கண்ட ஒவ்வொரு தினத்திலும் குறிப்பிட்ட மலர்களைக் கொண்டு பூஜை செய்தால் இல்லத்தில் அமைதி மற்றும் சுபிட்சம் பெருகும்.

## சுப முகூர்த்தம்

### பிரம்ம முகூர்த்தம்

- விடியலுக்கு முன் 3 மணி முதல் 6 மணி வரை பிரம்ம முகூர்த்தம்.

### தேவர்கள் காலம்

- அதிகாலை 6 மணி முதல் 7 மணி வரை தேவர்கள் காலம்.

### ரிஷிகளின் காலம்

- முற்பகல் 9 மணி முதல் 12 மணிவரை ரிஷிகளின் காலம்.

### பிதுர்க்களின் காலம்

- நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை பிதுர்க்களின் காலம்.

### சந்தியா காலம்

- பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை சந்தியா காலம்.

### பூத காலம்

- முன் இரவு 6 மணி முதல் 9 வரை பூத காலம்.

### பிரேத காலம்

- நடு இரவு 9 மணி முதல் 12 மணி வரை பிரேத காலம்.

### ராக்ஷச காலம்

- பின் இரவு 12 மணி முதல் 3 மணிவரை ராக்ஷச காலம்.







# ஐயப்ப பக்தர்களுக்கு உதவிசெய்ய காத்திருக்கிறோம்...





**சபரிமலையில் அய்யப்ப பக்தர்களுக்கு உதவி செய்ய ஐயப்ப சேவா சங்கத்தினர் தயாராக உள்ளனர்**

**போன் விபரம்**
**சபரிமலை சன்னிதானம் 04735 202043.**
**பம்பை 04735203407.**
**பக்தர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

திருச்சி வழியாக சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு உதவும் விதத்தில் அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் திருச்சி மாவட்ட யூனியன் சார்பாக, சபரிமலை சிறப்பு முகாம் துவங்கப் பட்டுள்ளது.

வெளியூரில் இருந்து வரக்கூடிய பக்தர்கள் இங்கு இரவு தங்கி அதிகாலை காலை எழுந்து காவேரியில் நீராடலாம் மேலும் முகா மிலேயே காலைக்கடன் வசதிகளும் உண்டு.

அருகாமையில் இருக்கக்கூடிய ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோவில் திருவானைக்கோவில் திருக்கோவில், சமயபுரம் திருக்கோவில் மேலும் பல திருக்கோவில்களில் சுவாமி தரிசிக் கலாம். மேலும் இங்கு காலை மற்றும் மாலை இரண்டு வேளைகளும் ஐயப்ப சுவாமிகளுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

தேவைப்பட்டால் வெளியூரில் இருந்து வரக்கூடிய ஐயப்ப பக்தர்கள் முன்அறிவிப்பு கொடுத்தால் மதிய உணவும் தயார் செய்து கொடுக்கிறார்கள்.



அழகுராஜா

இந்த முகாம் 17.11.2021 துவங்கி 15.01.2022 வரை, கார்த்திகை மார் கழி மாதங்களில் மட்டும் ஐயப்ப பக்தர்களுக்கு உதவும் விதத்தில் இயங்கும்.

ஐயப்ப பக்தர்கள் இந்த வசதி யை பயன்படுத்தி இறையருள் பெற லாம், மேலும் தொடர்புக்கு, முகாம் அலுவலர் அம்சாராம் : 9788477057

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

ஜனன ஜாதகத்தில் பிரச்சனையா
மனம் மற்றும் உடல் பிரச்சனையா

## சிவனை தலைவராக கொண்ட

# உழவாரபணி தீர்வு தரும்



உழவாரப்பணி, இதைவிடச் சிறந்த புண்ணியம் உலகில் வேறில்லை. உழவாரப்பணி செய்தே சிவனருள் பெற்றவர் திருநாவுக்கரசர்.

பழங்காலத்தில் கோயிலில் கிடைத்த நைவேத்யம், சிறுவருமானத்தை பெற்றுக் கொண்ட சிலர் தெய்வத் தொண்டாக கோயிலை தூய்மைப்படுத்தினர்.

இதற்காக சில கோயில்களில் மானிய நிலம் கூட இருந்தன, நம்மை வாழவைக்கும் தெய்வத்தின் இருப்பிடத்தை உழவாரப்பணி செய்து பாதுகாத்தால் நம் சந்ததிகள் நலமுடன் வாழ்வர்.









கோயிலில் புதர் மண்டிப் போகாமல் சுத்தப் படுத்துவது உழவாரப்பணி.

இதைச் செய்ய தோசைக் கரண்டியின் வடிவில் பெரியதாக உள்ள கருவிக்கு "உழவாரப் படை" என்று பெயர். இதைக் கையில் ஏந்தியபடி இருப்பவர் திருநாவுக்கரசர்.

எப்போதும் உழவாரப்பணி மூலம் கோயிலை தூய்மை செய்தபடி இறைவனை குறித்து பாடுவது இவரின் பணி.

சிவன்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதை விட மேலான புண்ணியத்தை உழவாரப்பணி தரும்.

**எவையெல்லாம் உழவாரப்பணி**

சிவ ஆலயத்திற்குள் சென்றவுடன் இறைவன் நமக்கு தரும் அல்லது உணர்த்தும் பணியே உழவாரப்பணி எனப்படும்

- ❖ என்வீட்டு துன்பங்கள் நீங்காமல் இருப்ப தற்கு பக்தர்கள் கோயிலில் போடும் குப் பைகளை குப்பை கூடங்களில் போடுவது
- ❖ இறைவனுக்கு சாற்றப்படும் நிர்மாலிய பூக்களை நந்தவனத்தில் போடும் பணி.
- ❖ திருக்கோயில்களில் சூழ்ந்திருக்கும் ஒட்டடைகள் அழுக்குகள் ஆகியவைகள் நீக்குவது.
- ❖ இறைவனுக்கு சாற்றப்படும் ஆடைகளை துவைப்பது.
- ❖ அழுக்கு படிந்த விளக்குகளை தூய்மை யாக்குவது.
- ❖ நந்தவனத்தை தூய்மைபடுத்துவது.
- ❖ தேங்கியிருக்கும் தண்ணீரை சுத்த படுத்துவது
- ❖ கோபுரங்களில் முளைத்திருக்கும் செடி கொடிகளை அகற்றுவது.
- ❖ சிவாச்சாரிகளின் அனுமதி பெற்று திருக்கோயிலின் கொடிமரம் உற்சவ மூர்த்திகளை இயற்கை மூலிகை கொண்டு தூய்மைபடுத்துவது.
- ❖ அறுபத்துமூவர் மற்றும் கல் திரு மேனி களுக்கு மாவு, தயிர் சாற்றி அதன்மீது படிந்திருக்கும் அழுக்குகளை நீக்குவது.
- ❖ திருக்கோயில்களில் உள்ள மின்விளக்கு களை சரிசெய்வது.
- ❖ வாரம் ஒரு முறை திருக்கோயிலை பசுஞ் சாணம் இட்டு மெழுகிடுவது.



- ❖ திருக்கோயிலை சுற்றி கோலமிடுவது.
- ❖ கோயிலில் படிந்திருக்கும் எண்ணை பிசுபிசுப்பை எடுப்பது.
- ❖ கற்பூர புகையால் படிந்திருக்கும் கரும்புகைகளை துடைப்பது..

இவையெல்லாம் உழவாரப் பணி ஆகும்.

உழவாரப்பணி செய்யும்போது இறை சிந்தனை அவசியம், அப்பரின் உழவாரப்பணியை இறைவன் சோதித்த வரலாறும் உண்டு.



கீதா-ராஜன்

ஒருமுறை திருப்புகலூரில் அப்பரடிகள் உழவாரப்பணியில் ஈடுபட்டிருந்தபோது, சிவபெருமான் அவரைச் சோதிப்பதற்காக, குப்பைகளோடு பொன்னையும் ஓட்டையும் அவர் கண்ணில் படும்படியாக இருக்கச் செய்தாராம், ஆனால் அப்பருடைய சொல், சிந்தை, செயல் எல்லாம் சிவமயமாகவே இருந்ததால், பொன்னையும் ஓட்டையும் சமமாகவே பாவித்து புல்லோடும் கல்லோடும் சேர்ந்து அங்கிருந்த பொய்கையிலே எறிந்தாராம் அந்தகைய மனப்பக்குவத்தை அவர் அடைந்திருந்தார்.

இந்த பணிசெய்யும் போது மனதளவில் இறைவன் வசிக்கும் வீட்டில் வேலை செய்யும் மனோபாவத்துடன் செய்தால், நமது மனம் வலிமையடையும், நோய்நொடி அன்டா பெருவாழ்வு கிடைக்கும்.

தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 2,00,000 பழமையான சிவாலயங்கள் உள்ளன. சுமார் 50,000 பழமையான விஷ்ணு ஆலயங்கள் உள்ளன.

விநாயகர், முருகன், வராகி, பைரவர் மற்றும் பிற தெய்வங்களுக்குரிய 2,000 ஆலயங்களும் உள்ளன.

ஆனால் தமிழகத்தில் இருக்கும் உழவாரப்பணி செய்யும் சிவனடியார்கள் குழு சுமார் 30,000த்திற்கும் குறைவே உள்ளன.

ஒரு குழுவாக செய்ய முடியாதவர்கள், தங்களது குடும்பம் மட்டுமே மாதம் ஏதோ ஒரு கோவிலை சுத்தப்படுத்தும் பணியை மேற்கொண்டால் குடும்பத்திற்கு மிகுந்த பலன் கிடைக்கும். உழவாரப் பணி செய்வதன் மூலமாக நம்முடைய ஜனன ஜாதகத்தில் உள்ள பல்வேறு கடுமையான கர்மவினைகள் படிப்படியாக அதே சமயம் வெகு சீக்கிரமாக தீர்ந்து விடுகின்றன.

இளைஞர்கள் இறை ஈடுபாடு உள்ள இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஒரு குழுவாக உருவாகி ஏதோ ஒரு ஆலயத்தில் மாதத்திற்கு ஒருநாள் தூய்மைபடுத்தலாம், இவ்வாறு புதிதாக உருவாகும் உழவாரப்பணி குழுவிற்கு தலைவராக அந்த சிவபெருமானையே நியமித்து, சிவத்தொண்டு செய்து பாருங்கள், சிவகணங்கள் உங்களுடன் துணை நின்று மறைபொருளாக உதவி செய்யும்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



# முத்தைத்தரு பத்தித் திருநகை பாடலும் கிருபானந்தவாரியாரும்

## கண்ணீர் சிந்திய டி.எம்.எஸ்.

அருணகிரிநாதர் பட பாடல் பதிவு செய்யும் நேரம். அந்தப்பாடலை பாட வேண்டியவர் டி.எம்.எஸ். ஆனால் பாடலுக்கு அர்த்தம் தெரியாததால் அந்த ஒலிப்பதிவு கூடமே மிகப்பெரிய களோ பரத்தில் காட்சி தந்தது.

"என்னய்யா சொல்கிறீர்கள்? இந்த பாடல் வரிகளுக்கு என்ன அர்த்தம் என்று இங்கே இருக்கும் ஒருவருக்குமே தெரியாதா?" உடல் குலுங்க குலுங்க சிரித்தார் டி.எம்.எஸ்.

ஒலிப்பதிவுக் கூடத்தில் இருந்த அத்தனை பேரும் டிஎம்எஸ்ஸின் அந்த கேள் விக்கு பதில் சொல்ல முடியாமல் மௌனமாக இருந்தார்கள்.

சிரிப்பதை நிறுத்திய டிஎம்எஸ்ஸின் குரல் கொஞ்சம் கோபத்தோடு உயர்ந் தது.

"சொல்லுங்கள் ஐயா, அர்த்தம் தெரியாவிட்டால் இதை நான் எப்படி உணர்வுகளோடு பாட முடியும்? அந்தப் பாடலை கேட்பவர்கள்தான் எப்படி அதை முழு மையாக ரசிக்க முடியும்?"

சுற்றி இருந்தவர்களின் மௌனம் தொடர்ந் தது. ஏனெனில் அவர்களுக்கு தெரியும். எந்த ஒரு பாடலையும் அதன் அர்த்தம் தெரியாமல், உணர்வு கள் புரியாமல் ஒருபோதும் பாட மாட்டார் டிஎம்எஸ்.

மீண்டும் ஒரு முறை தன் கையி லிருந்த அந்த பாடல் வரிகளை வாசித்துப் பார்த்தார் டிஎம்எஸ்.



www.aanmeegamalar.com






"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்
குருபர எனவோதும்..."

திரும்ப திரும்ப வாசித்துப் பார்க்கிறார் டி.எம்.எஸ். அதன் பொருள் விளங்கவில்லை.

தலைநிமிர்ந்து தன்னை சுற்றி இருந்தவர்களை பார்த்த பின், அழுத்தமாக உதட்டை பிதுக்கி விட்டு, பாடல் எழுதி இருந்த காகிதத்தை கீழே வைத்தார் டி.எம்.எஸ்.

“அர்த்தம் தெரியாவிட்டால் ஆயிரக்கணக்கில் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் பாட மாட்டான் இந்த சௌந்தரராஜன்..."

இப்படி சொல்லிவிட்டு ஒலிப்பதிவுக் கூடத்தி லிருந்து புறப்பட்டும் விட்டார் டிஎம்எஸ்.

அவரது பிடிவாதம் அறிந்த படக் குழுவினர் செய்வது அறியாமல் திகைத்து நின்றார்கள்.

அப்போது அருகில் இருந்த யாரோ ஒருவர் அசரீரி போல குரல் கொடுத்தார்: “வாரியார் சுவாமிகளை கேட்டால் இதன் பொருள் புரியும்...”

“அப்படியா?” என்று திரும்பி அவரைப் பார்த்து கேட்ட டி.எம்.எஸ்., அடுத்த நிமிடமே வாரியார் வீட்டை நோக்கி விரைந்து புறப்பட்டார்.

வரவேற்றார் வாரியார்.

பணிவோடு தன் அருகில் வந்து அமர்ந்த டிஎம்எஸ்க்கு புன்னகையோடும் *பொறுமையோடும் பொருள் விளக்கினார் வாரியார்.

“முத்தைத்தரு பத்தித் திருநகை ...
வெண்முத்தை நிகர்த்த, அழகான
பல்வரிசையும் இளநகையும் அமைந்த....
அத்திக்கு இறை ...
தெய்வயானை அம்மைக்குத் தலைவரே...
சத்திச் சரவண...
சக்திவேல் ஆயுதத்தை ஏந்தும்
சரவணபவக் கடவுளே...
முத்திக்கொரு வித்துக் குருபர...
மோக்ஷ வீட்டுக்கு ஒப்பற்ற ஒரு
விதையாக விளங்கும் ஞான குருவே..."

இப்படியாக ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருளை வாரியார் விளக்கமாக எடுத்துச் சொல்ல சொல்ல, அதை கவனமாக கேட்டுக் கொண்டு, அதன் பிறகே 'அருணகிரிநாதர்' படத்தின் அந்தப் பாடலைப் பாடினாராம் டி.எம்.எஸ்.

இந்த சம்பவத்துக்கு பின் வாரியாருடன் நெருங்கி பழகிய டி.எம்.எஸிடம் தனது இறுதி காலத்தைப் பற்றி கூறினார் வாரியார்.

“என் வாழ்வின் முடிவு எப்படி இருக்கும் என்பதை என் அப்பன் முருகப் பெருமான் என்றோ எனக்கு சொல்லி விட்டான். தன் வாகன மான மயிலை அனுப்பி, எந்த ஒரு கஷ்டமும் எனக்கு இல்லாமல் அந்த வானத்துக்கு என்னை எடுத்துக் கொள்வான் என் அப்பன் முருகன்...”

"வாரியார் சொன்ன அந்த வார்த்தைகளின்படியே தானே நடந்தது."



புனிதவேல்

லண்டன் சென்றிருந்த வாரியார் சென்னைக்கு விமானத்தில் திரும்பி வந்து கொண்டு இருந்த போது, 7.11.1993 அன்று அதிகாலை வானில் விமானம் பறந்து கொண்டு இருந்தபோதே இறந்து போனார்.

வாரியார் வாக்கு பலித்தது!

வானத்தில் பறக்கும் போதே அவர் உயிர் பிரிந்தது! இறைவனோடு இரண்டற கலந்தது!

விழிப்புணர்வுடன் இருப்பவர்களுக்கு ஒவ்வொரு வார்த்தையும் மந்திரம்தான்.விழிப்புணர்வு இல்லாத நிலையில் மந்திரமும் வெறும் வார்த்தைதான்.

வாரியார் விளக்கமாக கூறிய அதே பாடலை வாரியாரின் உயிரற்ற உடல் அருகே அமர்ந்து பாட வேண்டிய சூழ்நிலை வரும் என அப்போது நினைத்து பார்க்கவில்லை டிஎம்எஸ்.

வாரியாரின் இறுதி சடங்கு வேலூரை அடுத்துள்ள அவரது சொந்த ஊரான காங்கேயநல்லூரில் நடை பெற்றுக் கொண்டிருந்தது. உயிரற்ற வாரியாரின் உடல் அருகில் அமர்ந்து கண்ணீர் விட்டு உடல் குலுங்க குலுங்க அழுது வாரியார் விளக்கம் கூறிய முத்தைத்திரு.... என்ற பாடலை பாடி கண்ணீர் வடித்தார் டி.எம்.எஸ்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572





# மிகப் பழமையான சிவன் கோவில் புதுப்பிக்கும் முயற்சியில் சிவ பக்தர்கள்



கஜபிருஷ்ட அமைப்பில் சோழர்கள் சிவன் கோயில்களை கட்டியதுபோல அதற்குபின்வந்த மன்னர்கள் சிவன் கோயிலினை அவர்கள் பாணி யில் கட்டி அம்மனையும் நிறுவி உள்ளனர்.

திருக்கழுக்குன்றத்தினை சுற்றி உள்ள அனைத்து சிவன்கோயில்கள் வெவ்வெறு பெயர்களில் இருந்தாலும் அனைத்து கோயில் களிலும் அம்மன்பெயர் திரிபுரசுந்தரி என்றே அமைந்துள்ளது.

அந்த வகையில் ஆலய தரிசனமாக பாண்டூரில் அமைந்துள்ள கைலாசநாதர் கோயிலினை பார்க்கலாம்.

திருக்கழுக்குன்றத்திலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருக்கழுக்குன்றம்



நெரும்பூர் வழி மார்க்கமாகவும் இந்த ஆலயத்திற்கு செல்லலாம்.

தெற்கு பார்த்தவாறு ராஜகோபுரம் அமைந்துள் ளது. அதன் நேரே கருங்கல்களால் ஆன ஜன்னல் அமைந்துள்ளது. ஜன்னலின் வழியே பார்க்கை யில் திரிபுரசுந்தரி அம்மன் தரிசனம் காணலாம்.

கருவரை கிழக்கு பார்த்து அமைந்துள்ளது.





எதிரே நந்தி அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே செல்கையில் எதிரே கைலாசநாதர் அருமையாக நமக்கு காட்சியளிக்கின்றார். அவரை வணங்கி விட்டு வலதுபுறம் திரிபுரசுந்தரி நமக்கு நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார். அவரை வணங்கிவிட்டு வெளி பிரகாரம் வலம் வருகையில் விநாயகர், தட்சணமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா துர்கை என தனி தனி மாடங்கள் அமைத்துள்ளார்கள்.

சிலைகள் ஏதும் இன்னும் வைக்கவில்லை. பிரகாரம் வலம் வருகையில் வினாயகருக்கு தனி கோயில் அமைந்துள்ளது. அதுபோலவே முருகர் வள்ளிதெய்வானையுடன் காட்சி யளிக்கின்றார்.

சண்டிகேஸ்வரருக்கு தனி கோயில் அமைத்துள்ளார்கள். கோயிலுக்கு உள்ளேயே சிறிய கிணறு உள்ளது. நவகிரக சன்னதி தனியே அமைத்துள்ளார்கள். பிரதோஷம் சிவராத்திரி இங்கு விஷேஷமாக குறிப்பிடுகின்றார்கள்.

சக்தி மிகுந்தவராக கைலசநாதரும் திரிபுரசுந்தரி அம்மனும் அமைந்துள்ளதால் பக்தர்களுக்கு வேண்டிய வரத்தினை அருள்வதாக உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர். சிதிலமடைந்த கோயி லினை அங்குள்ள இளைஞர்கள் சிலர் எடுத்து புதுப்பித்து வருகின்றார்கள்.

அனைவரும் பணிகாரணமாக சென்னைக்கு சென்று வருபவர்கள். சனி ஞாயிறு மற்றும் விடுமுறை காலங்களில் கோயிலினை கட்டி வருகின்றார்கள். திருக்கழுக்குன்றம் பெரிய கோயிலுக்கு சொந்தமான கோயிலாக இதனை சொல்கின் றார்கள். இங்குள்ள ஸ்வாமி சிலைகள் திருக்கழுக்குன்றம் கோயிலில் உள்ளதாக பக்தர் ஒருவர் குறிப்பிட்டார்.



வேலன்

தற்போது புதுப்பிப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, சிவன் கோயிலுக்கு ஏதாவது கைங்கரியம் செய்யவேண்டும் என விரும்புவர்கள், தற்போது ஆலயத்தை பாராமரிக்கும் திரு.சிவக்குமார் 8838434938 இவரைத் தொடர்பு கொள்ளலாம், வரலாற்றில் இந்த கோயிலினை பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# பிறத்தல், தரிசித்தல், நினைத்தல், இறத்தல், புண்ணிய பயன்கள்

## அனைத்தும் தரும்

# நெல்லிவனநாதர்

தேவாரப்பாடல் பெற்ற 276 சிவாலயங்களில் இது 181–வது தேவாரத்தலம் ஆகும்.

அமைவிடம்: திருவாரூர் மாவட்டம்

திருவாரூர் திருத்துறைப்பூண்டி மார்க்கத்தில் உள்ளது. திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் மேற்கே திருநெல்லிக்காவல் செல்லும் பாதையில் திரும்பி 4 கி.மி. சென்றால் இத் தலத்தை அடையலாம்.

நெல்லி மரத்தைத் தலமரமாகக் கொண்டதால், இப்பெயர் பெற்றுள்ளது.

பிறத்தல், தரிசித்தல், நினைத்தல், இறத்தல் முதலியவைகளால் வெவ்வேறு இடங்களில் கிடைக்கும் புண்ணிய பயன்கள் அனைத்தும் இந்த ஒரே தலத்தில் கிடைத்து விடும்.

மாசி மாதம் மாலை வேளையில் சூரிய ஒளிக் கதிர்கள் இங்குள்ள மூலவர் மீது பட்டு சூரிய பூஜை நடக்கும்.

சரும நோய் நிவாரணத் தலம்

இத்தல இறைவன் சுயம்புலிங்கம்

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத்தலங்களில் இது 117வது தலம். இத்தல இறைவனை பிரம்மா, விஷ்ணு, சூரியன், சந்திரன், சனி, கந்தர்வர், தேவலோக மரங்கள் வழிபாடு செய்துள்ளன.

திருமணத்தடை நீங்கவும், குழந்தை பாக்கியம் வேண்டியும், கோபம் குறையவும், குஷ்டரோகம் நீங்கவும் பிரார்த்தனை செய்கின்றனர்.

இறைவர் திருப்பெயர்: நெல்லிவனநாதர்

இறைவியார் திருப்பெயர்: மங்களநாயகி

தல மரம் : நெல்லி மரம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம், சூரிய தீர்த்தம்

வழிபட்டோர்: சூரியன், பிரமன், திருமால், சந்திரன், சனீஸ்வரன், கந்தருவர், துருவாசர், சோழ மன்னர்களான ஆமலகேச சோழன், உத்தம சோழன், இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன்

தேவாரப் பாடல்கள்:

திருஞானசம்பந்தர் தேவாரம்

அறத்தா லுயிர்கா வலமர்ந் தருளி
மறத்தால் மதில்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தால் தெரிவெய் தியதீ வெண்டிங்கள்
நிறத்தான் நெல்லிக்கா வுள்நிலா யவனே.

தல வரலாறு: திருவாரூரில் வாழ்ந்த சிவபக்தர் ஒருவர் ஈசன் அருள் பாலிக்கும் திருத்தலங்களுக்குச்சென்று வழிபடுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்தார். இத்தலம் வந்து



இறைவனை தரிசித்தார். ஈசனைத் தரிசித்த சிவபக்தர் அந்தி சாய்ந்து இருள் சூழ்ந்ததால் ஓய்வெடுத்துவிட்டு, பொழுது புலர்ந்ததும் செல்லலாம் என அத்தலத்திலேயே தங்கிவிட்டார்.

அப்போது கொடிய காட்டு மிருகங்கள் அனைத்தும் ஒற்றுமையாய் ஈசனை வணங்கியதைக் கண்டு வியந்தார், தேவகணங்கள் நாள்தோறும் வந்து வில்வ தளங்களாலும் நறுமணமிக்க மலர்களாலும் வேதங்களை ஓதி வழிபடுவதைக் கண்டார் தேவகணங்கள் இறைவனை தரிசித்து விட்டு பொழுது விடிவதற்கு முன் சென்று விடுவதையும் பார்த்து சோழ மன்னனிடம் தெரிவித்தார். சோழ மன்னன் மகிழ்ச்சியடைந்து அங்கிருந்த காடுகளை அழித்து, நகரமாக்கி பெரிய கோயிலைக் கட்டினான்.

சோழ மன்னன் ஒருவனுக்கு நெடுங்காலமாக புத்திர பாக்கியம் இல்லை. இத்தலம் வந்து இறைவனிடம் வேண்டினான். அப்போது அன்னை பராசக்தியே மூன்று வயது பெண்ணாக வடிவம் கொண்டு மன்னனின் மடியில் வந்து அமர்ந்தாள். அப்போது வானில் ஒரு அசரீரியாக, அம்பாளே குழந்தை வடிவில் வந்துள்ளதாகவும், அவளை "மங்களநாயகி' என பெயரிட்டு வளர்த்து வரும்படியும் கூறியது. மன்னன் அக்குழந்தையை வளர்த்து வந்தான்.

ஒரு சமயம் மங்களநாயகி திருவாரூர் கோயிலில் தரிசனம் செய்து கொண்டிருந்த போது, திருநெல்லிக்கா வந்து உன்னை திரு மணம் செய்வோம்," என்று இறைவனின் அசரீரி கேட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தாள். அதேபோல தேவர்கள் சூழ, வேதமந்திரங்கள் ஒலிக்க, மங்களநாயகிக்கு மாலை சூடி சிவபெருமான் திருமணம் செய்து கொண்டார்.

தேவ லோகத்தில் உள்ள கற்பகம், பாரிஜாதம், சந்தானம், அரிசந்தனம், மந்தாரம் ஆகிய ஐந்து மரங்களும் வேண்டியதை தரக்கூடிய ஆற்றல் பெற்றவை. இதனால் இந்த மரங்களுக்கு மிகுந்த கர்வம் உண்டாகி விட்டது. அதன் காரணமாக ஒருமுறை தேவலோகம் வந்த துர்வாசரை மதிக்காததால் அவர் கோபம் கொண்டு "நீங்கள் பூமியில் புளிக்கும் கனிகளைக் கொண்ட நெல்லி மரங்களாக மாறுங்கள்" என்று சாபமிட்டார்.

பூவுலகில் நெல்லி மரங்களாக மாறிய பஞ்சவிருட்சங்கள் தங்கள் நிலைகண்டு வருந்தி பிரம்மதேவரிடம் முறையிட்டன.

பிரம்மதேவரும், "நெல்லி மரங்களின் நிழலில் சுயம்புவாகத் தோன்றும் ஈசனைப் பூஜித்து வர உங்களது அருமையைப் பூவுலகினர் அறிந்து கொள்வதோடு ஈசன் அருளால் மீண்டும் தேவலோகம் செல்ல அருளப் பெறுவீர்கள்'' என்று கூறியருளினார். அவை சாப விமோசனமடைந்து மீண்டும் தேவலோகம் செல்லவும், நெல்லி மரத்தின் அருமையை பூலோகத்தினர் அறிந்து கொள்ளவும், ஈசன் அந்த நெல்லிமரத்தின் அடியிலேயே சுயம்பு லிங்கமாகத் தோன்றினார்.


சிவத்திரு.குமரேசன்

ஐந்து தேவ மரங்களும் இறைவனுக்கு தொண்டு செய்த பின் தேவலோகத்திற்கு திரும்பிச் சென்றன.

நெல்லிமரத்தின் அடியில்தோன்றியதால் இறைவன் நெல்லிவனநாதர் என அழைக்கப்படுகிறார். இறைவன் தங்கிய இத்தலமும் திருநெல்லிக்கா என அழைக்கப்பட்டது.

### பஞ்சகூடபுரம்

பஞ்சாட்சரம் பூஜை செய்த பஞ்ச கூடபுரம் என்று வழங்கப்படும் ஐந்து திருத்தலங்களில் திருநெல்லிக் காவல் திருத்தலமும் ஒன்றாகும். இதர பஞ்சகூடத்










தலங்கள் நாட்டியத்தான்குடி, திருக்காறாயில், திருத்தெங்கூர் மற்றும் நமசிவாயபுரம் என்பன வாகும்.

**பஞ்ச தீர்த்தங்கள்**

இத்தலத்தின் தீர்த்தங்களாக பிரம்ம தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், ரோகநிவாரண தீர்த்தம், சக்கர தீர்த்தம் என்ற பஞ்ச தீர்த்தங்கள் உள்ளன.

www.a

இத்தலத்தில் கந்தர்வன் ஒருவன் இத்தலத்தில் உள்ள ரோக நிவாரண தீர்த்தத்தில் நீராடி குஷ்ட நோய் நீங்கப் பெற்றுள்ளான்.

திருக்கோயிலுக்கு எதிரில் பிரம்மதேவரால் உருவாக்கப்பட்ட பிரம்மதீர்த்தம் உள்ளது.

**கோவில் அமைப்பு:**

சுயம்புத் திருமேனியான ஈசன்இத்தலத் தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்தில் அருள்பாலிக்கின்றார். ஈசனின் மேற்கு நோக்கிய திருக்கோலம் "சத்யோஜாத மூர்த்தமாக" வணங்கப்படுகிறது. ஐந்து நிலைகளையுடைய ராஜகோபுரத்துடன் சுற்றிலும் மதில்கள் சூழ காட்சி அளிக்கிறது.

5 நிலை கோபுர வாயிலுக்கு வெளியே உள்ள கவசமிட்ட கொடிமரத்தையும், கொடிமர விநாய கரையும் பணிந்து, நந்தி மண்டபத்தைக் கடந்து உள்ளே செல்லலாம். பிராகாரத்தில் நால்வர், கஜலட்சுமி, விநாயகர், வள்ளி தெய்வயானை சுப்பிரமணியர், சனிபகவான், தலமரம், நெல்லி, மரத்தினடியில் நெல்லிவன நாதர், பைரவர், நவக்கிரகங்கள் முதலிய சந்நிதிகள் உள்ளன.

பிரகார வலம் முடித்துப் படிகளேறி முன் மண் டபத்தை அடைந்தால் இடதுபுறம் சோமாஸ் கந்தர் தரிசனம். நேரே நடராஜ சபை உள்ளது. இருபுறத்திலும் உற்சவத் திருமேனிகள் வைக்கப் பட்டுள்ளன. மண்டபத்தில் மேற்புறத்தில் நவக்கிரகங்கள்,பன்னிரு ராசிகள்,தசாவதாரங்கள் முதலிய சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. மூலவர் சுயம்பு லிங்கமாக மேற்கு பார்த்தபடி அருள்பாலிக்கிறார். இத்தலத்தில் ஆண்டு தோறும் ஐப்பசி கிருஷ்ண பட்ச சதுர்த்தசி முதல் ஏழுநாளும், .மாசி மாதம் 18ம் தேதி முதல் ஒரு வார காலத்திற்கும் மாலை வேளையில் சூரிய ஒளிக் கதிர்கள் இங்குள்ள மூலவர் மீது பட்டு சூரிய பூஜை நடக்கும். கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை சந்நிதிகளும் உள்ளன. சண்டேசுவரர் உள்ளார்.

நின்ற திருக்கோலத்தில் காட்சி தரும் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. தெற்கிலுள்ள கோபுர வாயில் வழியே அம்பாள் சந்நிதியை சென்று அடையலாம். தெற்கு வாயிலுக்கு வேளியே எதிரில் ஆலயத்தின் தீர்த்தக்குளம் உள்ளது. இத்தலம் சூரியன், பிரமன், திருமால், சந்திரன், சனி, கந்தர்வர், துர்வாசர் ஆகியோர் வழிபட்ட சிறப்புடையது.

பஞ்சகூடபுரம் என்று சொல்லப்படும் ஐந்து தலங்களுள் திருநெல்லிக்காவல் தலமும் ஒன்று. மற்ற பஞ்சகூடபுர தலங்கள்:

1.நாட்டியத்தான்குடி, 2.திருக்காறாயில், 3.திருத்தெங்கூர், மற்றும் 4 நமசிவாயபுரம் என்பன. கந்தர்வன் ஒருவனின் குஷ்ட நோய் இத்தலத்தில் நீங்கியது. அவன் நீராடிய ரோகநிவாரண தீர்த்தம் உள்ளது. திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடியருளியுள்ள பதிகம் 2ம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

– சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

aanmeegamalar@gmail.com

### தில்லியில் வேதப் பிரச்சாரர் சன்ஸ்தான் சிறப்பாக நடத்திய

# மஹான்யாசம், ருத்ரஜபம்

தில்லி வசந்தராஎன் கிளேவில் உள்ள ஸ்ரீ சங்கட ஹர கணபதி கோயில் வளாகத்தில் நவம்பர் 28 அன்று மஹான்யாசம், அதைத் தொடர்ந்து ருத்ரஜபம், 11 முறை அபிஷேகம் நடைபெற்றது. இதையொட்டி, ஸ்ரீ சங்கடஹர கணபதிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இந்த மகான்யாசம், ருத்ர ஜபம், ஸ்ரீ 'வேதம் சந்திரசேகர்' மற்றும் அவரது குழுவினரால் நடத்தப்பட்டது. நாற்பதுக்கும் மேற்பட்ட வேத பண்டிதர்கள் கலந்து கொண்டனர்.



தினம் மகா தீபாராதனை மற்றும் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. டெல்லியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், நொய்டா, இந்திராபுரம், வசிஹாலி மற்றும் காசியாபாத் ஆகிய அண்டை பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஒரே எண்ணம் கொண்ட பக்தர்களால் தொடங்கப்பட்ட VESS, இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது, ஸ்ரீ சங்கடஹர கணபதி கோயிலை நிர்வகிக்கிறது, டெல்லி மேம்பாட்டு ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்டுள்ளது.

மேலும், மூலவர் ஸ்ரீ சங்கடஹர கணபதி, ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர், ஸ்ரீ ஐயப்பன், ஸ்ரீ தையல் நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமி (சிவன் மற்றும் பார்வதி), ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமணியர், ஸ்ரீ ஆஞ்சநேயர் மற்றும் நவகிரகங்கள் உள்ளிட்ட பிற சிலைகள்நிறுவப் பட்டுள்ளன.

மேலும், நிறுவப்பட்ட கோஷ்ட தேவதைகள்: ஸ்ரீ நர்த்தன கணபதி, ஸ்ரீ தட்சிணா மூர்த்தி, ஸ்ரீ மஹா விஷ்ணு, ஸ்ரீ பிரம்மா மற்றும் ஸ்ரீ துர்க்கை ஆகியவை அடங்கும். இந்த கோவில் வளாகத்தில், இரண்டு பல்நோக்கு அரங்குகள்உள்ளன.

சிறிய மத மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, 200 க்கும் மேற்பட்ட பக்தர்கள் அமரும் வசதியுடன், ஒவ்வொரு மண்டபத்திலும், இரண்டாவது மாடியில், பணியாளர்கள் குடியிருப்பு கடைஉள்ளது.

கிரானைட் கல்லில் செதுக்கப்பட்ட ஸ்ரீசங்கடஹர கணபதி, வட இந்தியாவிலேயேமிகவும் உயரமானதாகவும், கனமானதாகவும் கருதப்படுகிறது. VESS நிர்வாகம், ஸ்ரீ சங்கடஹர சதுர்த்தி நாட்களில் சிறப்பு அபிஷேகம், பிரதோஷ பூஜை, சமஷ்டி நவக்கிரக ஹோமம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளைத் நடத்தி வருகிறது.



எஸ்.வெங்கடேசன்

மகா கும்பாபிஷேக விழாவில் மூத்த பாஜக தலைவர் ஸ்ரீ எல்கே அத்வானி, அப்போதைய டெல்லி முதல்வர் ஷீலா தீட்சித் மற்றும் பல வி.வி.ஐ.பி.எஸ்.களும் கலந்து கொண்டனர். காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி, ஸ்ரீ தயானந்த சரஸ்வதி மற்றும் பிற முக்கியஸ்தர்களும் இந்த கோவிலுக்கு வருகை தந்துள்ளனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண் போன்:
9811161370

# இழந்தவற்றை மீண்டும் பெறவும், இஷ்ட சித்திகளைப் பெறவும் உகந்த ஸ்ரீ குரேசப்பெருமான்

சான்றோர் நிறைந்த நாடாம், தொண்டை வளநாட்டில் மகிமை மிகுந்த திருத்தலங்கள் எண்ணற்றவை. அவற்றுள்... பாற்கடலில் தோன்றிய வெள்ளை குதிரையும், இந்திரனும் வழிபட்ட திருக்குழசை என்னும் திருக்கோளிப்புதூர் திருத்தலம் சிறப்பு வாய்ந்ததாகும்.

குழைந்தபல்லூர், திருக்குரேஸ்வரம், குழசைப்பதி போன்ற பெயர்களாலும் இப்பதி அழைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த தலம் பெரிய கொழப்பலூர் என்று வழங்கப்படுகிறது.

**வெண்பரியின் பூஜை:**

ஒரு சமயம் நாரதர் கடற்கரை வழியாக சென்று கொண்டிருந்த போது, சோர்ந்தமுகத்துடன் கண்ணீர் வடித்தபடி நின்றிருந்தது ஓர் வெண் குதிரை.

அதனருகே சென்ற நாரதர், அக்குதிரையை அறிந்து, கருவில் பிறந்தவர்களுக்கே கலக்கம் உண்டு. நீ அமர்தத்தோடு பிறந்தாய். பிறகு ஏன் இந்த அவலம் எனக் கேட்கிறார்? அதற்கு அந்த வெள்ளைக் குதிரையோ...

"கத்ரு என்னும் நாக கன்னிகைக்கும் அவளது தங்கை வினதைக்கும் உண்டான வாக்குவாதத்தின் படி தக்ஷகன் என்கின்ற பாம்பின் விஷமானது என் கால் தொடையின் இடப்பாகத்தை தாக்கியது.

நான் பாற்கடலில் தோன்றியதால் அந்த விஷத்தின் வீரியமானது என்னைக் கொல்லவில்லை. ஆனால் அந்த விஷமானது என் தொடைப்பகுதியை பாழ்படுத்தியதோடு, என் வெள்ளை நிறத்தைக் கருமை நிறமாக மாற்றியது. இப்படியே நான் தேவலோகம் சென்றால் என்னை ஏளனம் செய்வார்கள். இனி நான் என்ன செய்வது?" எனப் புலம்பியது.

சற்று நேரம் சிந்தித்த நாரதர்... "சான்றோர் நிறைந்த தொண்டை நன்நாட்டில், காஞ்சிபுரத்திற்கும், திருவண்ணாமலைக்கும் நடுவில் திகழும் திருக்கோளிபுதூர் என்னும் திவ்ய நகரின் வடக்குப் பகுதியில் குராமரத்தடியிலே சுயம்பு மூர்த்தமாக எழுந்தருளியிருக்கின்றார்




www.aanmeegamalar.com





ஸ்ரீ குரேசப்பெருமான். இந்த தான்தோன்றிப் பெருமானை பூஜித்து, எண்ணற்ற ரிஷிகளும், சித்தர்களும் பற்பலப் பேறுகளைப் பெற்றுள்ளனர். நீயும் அங்கு சென்று, உள்ளன்புடன் எம்பெருமானை வணங்கி, வழிபட்டு, உன் உடலில் ஏற்பட்ட அசுத்தத்தை நீக்கி, இன்புறுவாய்" என ஆலோசனை கூறி மறைந்தார்.

அதன்படியே வெண்குதிரையானது, ஆகாய மார்க்கமாகப் பறந்து, கோளிப்புதூரை அடைந்து, அவ்வூரின் வடபால் உள்ள பாஹுநதி என்னும் சேயாற்றில் குளித்து, குரா மரத்தடியில் எழுந்தருளும் திருக்குரேசரை தனது நாவால் நக்கியும், நறுமண மலர்களாலும் வழிபட்டு, பெருமானே... உமது அருளால் எனது மாசு நீங்கி, பழைய நிலையை அடைந்திட வேண்டும் என பிரார்த்தனை செய்து, வணங்கியது.

மானசீகமாக வெள்ளை குதிரையின் பூஜையை ஏற்ற எம்பெருமான் அசரீரி வாக்காக தன்னை ஒரு மண்டலம் பூஜிக்கும்படி கூறியருளினார். அதன்படி 48 நாட்கள் சேயாற்றில் நீராடி, தனது நாவால் சிவலிங்கத்தை வருடி, உளமார தியானித்து வந்தது. முடிவில்... ரிஷபாரூடராக அம்பிகையுடன் எழுந்தருளிய பெருமான் ஸ்வேதபரியின் கருமையை நீக்கி, திருவருள் புரிந்தார்.

அந்த வெண்பரியோ... "இறைவா உன் மீது மனம் குழைந்து யான் பூஜித்தமையால் இந்த பதி இன்றிலிருந்து "குழைசை" என அழைக்கப்பட வேண்டும்" என்ற வரத்தை கேட்டுப்பெற்று, ஈசனை வலம் வந்து பணிந்து, வணங்கி, ஆகாய மார்க்கமாக இந்திரலோகம் பறந்து சென்றது.

வெண்குதிரை குழைந்து, குழைந்து வழிபட்டதால்... இத்தலம் குழைசை என்று அழைக்கப்பட்டது. இத்தலப் பெருமான் ஸ்வேதபரீஸ்வரர் என்றும் போற்றலானார். இவரை "ஸ்வேத அஸ்வேஸ்வரர்" என்றுமழைப்பர்.

குராமரத்தடியில் தோன்றியதால் இப்பெருமான் திருகுராவடிநாதர் என்றும், திருக்குரா ஈஸ்வரர் என்றும் அழைக்கப்பெறுகின்றார்.

**தேவேந்திரனின் பூஜை:**

ஒரு சமயம் தேவலோகம் பொலிவிழந்தது. சோகமான நிலையிலிருந்தது. அப்போது தேவகுருவான வியாழ பகவானை இந்திரன் வணங்கி, அசுரர்களின் அச்சுறுத்தலால் தேவலோகமே அமைதி இழந்துக் காணப்படுகிறது. இந்த நிலை மாறிட, வழியினைக் கூறும்படி கேட்க....குரு பிரகஸ்பதியோ, பரம்பொருளான சிவபெருமானை வழிபடுவதே இதற்கு சிறந்த வழி எனக் கூறியருளினார்.

அப்போது அங்கு வந்த நாரதர், இந்திரன் வாயிலாக விஷயத்தை அறிந்தார். சிவபெருமான் பூவுலகில் பற்பல லீலைகளை நிகழ்த்தியுள்ளார்.









அவற்றுள் மகிமை பொருந்திய தொண்டை வளநாட்டில் கோளிப்புதூர் என்கிற தலத்தின் மகிமைகளைக் கூறி, அங்கு ஈசன் சுயம்புவாக எழுந்து அருள் புரிவதாகவும், அவரைப் பூஜித்த வெண்பரி நன்மை அடைந்ததாகவும் கூறினார். ஆகவே அங்கு சென்று வழிபட, திருவருள் கிடைக்குமென அறிவுறுத்தினார்.

விண்ணுலகு விட்டு மண்ணுலகம் அடைந்த தேவேந்திரன், கோளிப்புதூரரை அடைந்து, நிருர்த்தி திக்கில் பண்டக சாலையமைத்தான். சிவபூஜைக்கு வேண்டிய நீருக்காக நீரோடை உண்டாக்கினான். குபேரனை வேண்டி, பூஜைக் குரிய பொன்னாலான பாத்திரங்களைப் பெற்றான்.

இவைகளை வைத்து, கார்த்திகை மாத பஞ்சமி திதி, சோமவாரம் கூடும் நன்னாளில் காமதேனுவின் பாலால் குரேஸ்வரப் பெருமானை அபிஷேகித்து, பட்டு வஸ்திரம் சாற்றி, குபேரனிடம் பெற்ற நவரத்தின ஆபரணங்களை அணிவித்து, மந்தாரை இருவாட்சி கொன்றை மல்லிகை முல்லை போன்ற வாசனை மலர்களைச் சாற்றி, பலவித பழங்களையும், பக்ஷணங்களையும் நிவேதனம் செய்து, பஞ் சாக்ஷர மந்திரம் ஜபித்து, அஷ்டாங்க நமஸ்காரம் செய்து வணங்கி நின்றான்.

இவ்வாறு நித்தமும் பூஜித்து வரும் வேளையில்.... "உத்தராயண காலத்தில் பூச நட்சத்திரமும், பௌர்ணமியும் சேர்ந்து வரும் காலத்தில் உமக்கு அருள் புரிவேன்" என அசரீரி வாயிலாக வாக்களித்தார் சிவனார்.

அவ்வாறே பௌர்ணமி பூசத்தன்று இந்திர னுக்கு ரிஷபாரூடராக காட்சி தந்த திருக்குரா ஈஸ்வரன் அபயமளித்து, வேண்டும் வரங்களைத் தந்தருளினார்.

அதோடு, "கடலில் மூழ்கி, தவம் கிடக்கும் ததீசி முனிவரின் முதுகெலும்பைக் கொண்டு, இரு சூலக் குறியாக விளங்கும் ஆயுதம் செய்து கொண்டால், அதன் கீழ்பாக சூலக்குறியில் பராசக்தியும், மேல்பாக சூலக்குறியில் சிவமாகிய யாமும் தங்கியிருந்து உனக்கு வெற்றி யளிப்போம்" எனவும் வரமருளினார். அவ்வாறு இந்திரன் உண்டுபண்ணிய ஆயுதமே வஜ்ராயுத மாகும்.

இந்திரன் மலர்வனம் அமைத்து, தியானித் திருந்த இடம் இன்றும் "இந்திரவனம்" என்று அழைக்கப்படுகிறது.

இத்தலத்திற்கு அருகே கங்காபுரம்என்னுமிடத் தில் துர்வாசரால் பூஜிக்கப்பட்ட கங்காதேஸ்வரர் மற்றும் சேயாற்றின் வடகரையில் உள்ள விநாயக புரம் என்னுமிடத்தில் தேவநாயகி உடனமர் விருபாக்ஷீஸ்வரர் ஆகிய சிவலிங்கங்களையும் இந்திரன் வழிபட்டதாக கோளிப் புதூர் தல

வரலாறு கூறுகின்றது.

ஊரின் வடக்கே பெரியதொரு ஆலயமாக அமையப்பெற்றுள்ளது.

இறைவன் சன்னிதி கிழக்கு பார்த்தவண்ணம் மகாமண்டபத் துடன் மூடுதளமாக அமைந்துள்ளது. உள் கோஷ்டம், வெளி கோஷ்டம் எனஇரண்டு கோஷ்டங்கள் உள்ளன.

கருவறையுள் குதிரையின்குளம்பு பட்ட அடையாளத்தோடு,சுயம்பு மூர்த்தமாக ஸ்ரீ ஸ்வேதஅஸ்வேஸ் வரர் அழகிய உருவில் அருள்பாலிக் கின்றார். ஸ்ரீ குரேஸ்வரர் (குராவனத் தினிடையே தோன்றியதால்) என்றும் அழைப்பர்.



மோ.கணேஷ்

அம்பாள் சன்னிதி தெற்கு பார்த்தபடி தனியாக வெளியே அமைந்துள்ளது. அம்பிகையாக ஸ்ரீ சிவசுந்தரி எழிலுற காட்சியளிக்கின்றாள். திரிபுரசுந்தரி என்றும் அழைக்கப்படுகின்றாள்.

ஆலய வாயு மூலையில் வாயுதேவர் பூஜித்த வாயுலிங்கம் உள்ளது. ஈசான்ய திசையில் 'பரமேச கூபம்' என்னும் கிணறு ஒன்று உள்ளது. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்று பெருமைகளையுடைய இவ்வாலயத்தில் சோழர்கால கல்வெட்டுகள் நிறைந்து காணப்பெறுகின்றன.

கண்டராதித்த சோழன்... கார்த்திகை மாதம் பிரம்மோற்சவம் நடத்திடவும், தினமும் தூங்கா விளக்கெறியவும், பசுமடம் நன்றாக நடத்திடவும், பூஜை புரியும் ஆதிசைவ அந்தணர்களுக்கு உடை உறைவிடம் உணவு போன்றவற்றிற்கு நிலங்கள் பல ஒதுக்கியது கல்வெட்டின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதோடு, இம்மன்னன் இங்கு திருக்குளங்கள் எடுப்பித்து, கோட்டை அமைத்து வாழ்ந்துள்ளான். இவ்வாலய திருப் பணிகள் பலவற்றை செய்துள்ளான்.

ஒரு கால பூஜை நடந்திடும் இவ்வாலயம் இந்துசமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆலயத்தின் எதிரில் உள்ள ஸ்வேதஅஸ்வ தீர்த்தம் சீரமைக்கப் படவேண்டிய அவசிய நிலையில் உள்ளது. தல விருட்சமாக குரா மரம் திகழ்கின்றது. ஆலய வளாகத் திற்கு உள்ளே பூந்தோட்டம் அமைந் திருப்பது சிறப்பு.

அஸ்வமாகிய குதிரை வழிபட்டதால் அஸ்வினி நட்சத்திர பரிகாரத் தலமாக திகழ்கிறது.

இவ்வூரில் ஸ்ரீ பனையம்மன், ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ வீரபத்திரர், கனகவல்லித் தாயார் சமேத ஸ்ரீ கரதூஷணப் பெருமாள் ஆலயங்கள் அமைந் துள்ளன.

இழந்தவற்றை மீண்டும் பெறவும், இஷ்ட சித்திகளைப் பெறவும் உகந்த திருத்தலம்.

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டத்தில், ஆரணி சேத்பட் நெடுஞ்சாலையில் சேத்பட்டிலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பெரிய கொழப்பலூர்.

ஜோதிட கலாநிதி
மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.
தொடர்பு எண்:9789156179

aanmeegamalar.com வழங்கும்
தினம் ஒரு திருக்குறள்







ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

# சைவத்தின் மூலக் கொள்கைகளை சிந்தாமல் சிதறாமல் தமிழகம் மட்டுமே வைத்துள்ளது

**கடவுள் உருவாக்கிய மதம்**

எனது ஆரம்ப பாடசாலை ஒரு கிறிஸ்துவ பள்ளிக்கூடம். அப்போது அங்கு பணியில் இருந்த ஆசியர்கள் அனைவருமே கிறிஸ்தவர்கள். இதனால் பாடங்கள் முதல் வழிபாடு வரையிலும் கிறிஸ்துவ தாக்கமே அதிகமாக இருக்கும். அது மட்டுமல்ல. குழந்தைகள் இடத்திலும் பாகுபாடுகள் வெளிப்படையாக காட்டப்படுவதும் உண்டு. கிறிஸ்துவ குழந்தைகளுக்கு தனிச் சலுகைகளும், வாய்ப்புகளும் வழங்கப்படும். இந்து குழந்தைகள் நன்றாக படிப்பவர்களாக இருந்தால் கூட அவர்களை பல நேரங்களில் ஓரங்கட்ட படுவார்கள்.

குழந்தைகள் தங்களுக்குள் பழகும் போதும், விளையாடும்போதும் கூட கிறிஸ்துவ குழந்தைகளின் மேலாதிக்கம் அதிகமாக இருக்கும். இத்தகைய ஒரு சூழலில் படிப்பை ஆரம்பித்த நான் எனக்குள் இயற்கையாலும் அப்போது பதிந்து இருந்த அதிகாரத்திற்கு உட்படக்கூடாது என்ற எண்ணம் மேலோங்கி கிறிஸ்துவ தாக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து அதே நேரம் வேறு வழியில்லாமல் அந்த பாடசாலையிலேயே படிக்க வேண்டிய நிலையிலும் பிள்ளை மனதிற்கு தகுந்த எதிர்புணர்ச்சியை பல நேரங்களில் காட்டி இருக்கிறோம். அதனால் சில சங்கடங்களும் எனக்கு அப்போது ஏற்பட்டது உண்டு.

இந்த மாதிரியான நிலையில் ஒரு கிறிஸ்துவ பிரசங்கியார் ஒருநாள் எங்கள் வகுப்பிற்கு வந்து மத போதனை செய்தார். அவர் பேச்சு உலகிலேயே அறிவுடைய மதம் விஞ்ஞான ரீதியிலான மதம். கிறிஸ்துவம் மட்டும் தான் மற்ற மதங்கள் எல்லாம் முட்டாள் தனமானவை அர்ப்பத்தனமானவை என்று எங்களுக்கு பாடம் எடுத்தார்.

இன்னும் ஒருபடி மேலே சென்று இந்துமதத்தில் சிலை வழிபாடும். ஆடு கோழி பலி இடுதலும், தீ மிதித்தலும் பெண்களை உயிரோடு எரித்தலும், இன்னும் பல மூட பழக்கவழக்கங்கள் மட்டுமே நிறைந்துள்ளதாக கூறினார். அவர் கூற்று அந்த வயதிலேயே என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் என்னுடைய அப்போதைய வயதும், அறிவும் அவருக்கு பதில் சொல்ல கூடிய அளவில் வளர்ச்சியடையவில்லை.

ஆயினும், அவர் கூற்று என் மனதிற்குள் நெறிஞ்சி முள்ளாக உறுத்திக்கொண்டிருந்தது. இந்த நிலையில் திருமுருக கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவை இலங்கை வானொலியில் கேட்டேன். அவர் சைவ சமயத்தின் சிறப்புகள் பற்றியும். அதன் தொன்மைகளை பற்றியும். அதிலுள்ள அறிவுப்பூர்வமான விஷயங்களை பற்றியும் மிக எளிமையான முறையில் விளக்கினார். பாலைவனத்தில் தண்ணீருக்கு அலைந்தவனுக்கு இளநீர் கிடைத்தால் எப்படி சந்தோஷப்படுவானோ அதே போன்று அவர் பேச்சு என் மனதில் பாலை வார்த்தது.

நான் பிறந்த மதம் மூடத்தனமானது அல்ல. அதே நேரம் அதுதான் உலகிலேயே முதல் முதலில் தோன்றிய மதம் என்ற பெருமிதம் எனக்குள் துளிர் விட ஆரம்பித்தது. நாளாவட்டத்தில் அந்த பெருமிதம் மதங்களைப் பற்றிய பல விஷயங்களை தேடிப் படிக்கும் ஆர்வத்தை எனக்குள் வளர்த்தது. அப்படி நான் தேடலில் பெற்ற பல கருத்துக்கள் வியப்பையும். மலைப்பையும் எனக்கு தந்தது.

ஏசுநாதர் பிறப்பதற்கு 10,000 வருடங்களுக்கு முன்பே இந்து மதத்தின் முக்கிய பிரிவான சைவ

சமயம் அமெரிக்காவில் இருந்தது என்றும், ஒரு காலத்தில் லிங்க வழிபாடுதான் உலகம் முழுமையும் பரவிக்கிடத்தது. என்று அறியும் போது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.




அதன் விவரங்களை எனது நூலான யார் ஞானியில் தெளிவாக கூறியிருப்பதை வாசகர்கள்அறிவார் கள். அதனால் முதல் சமயமான சைவ சமயம் இந்து மதத்தின் இதயமாக எப்படி இருக்கிறது என்பதை நாம் அனைவருமே நன்கு உணர்ந்திருக்கிறோம். அப்படிப்பட்ட சைவ சமயத்தின் கருத்துக்களை ஒரளவு சிந்தனை செய்தால் நமது மதத்தின் வரலாற்று பின்னனியை நன்றாகவே தெரிந்து கொள்ளலாம். அப்படி தெரிந்து கொண்டால்தான் நம்மை பற்றிய பெருமிதம் நமக்கே வரும்.

இன்றைய நிலையில் சைவ சித்தாந்தம் தமிழ் பேசும் மக்களிடம் மட்டுமே அதிகமாக வழக்கத் தில் உள்ளது. காஷ்மீர சைவம் எனப்படும் சைவ பிரிவு இந்தியாவின் வடபகுதியில் நடை முறையில் இருந்து வருகிறது. ஆனால் காஷ்மீர சைவத்திற்கும் தென்கோடியில் வழங்கும் சைவத் திற்கும் பல மாறுபாடுகள் உள்ளன.

இதைபோலவே கர்நாடக பகுதியில் வழக்கத்தி லிருக்கும் வீர சைவத்திற்கும், தமிழ் சைவத்திற்கும் பல வேற்றுமைகள் உண்டு. எனவே சைவ சித்தாந்தம் என்றால் அது தமிழர்களுக்கே பிரத்யேகமாக உரிய சொத்தாகும். இதில் எந்தவித மாற்றுக்கருத்தும் கிடையாது.

தமிழர்களுக்கு சைவ சித்தாந்தம் சொந்த மென்றால் அது தமிழ்நாட்டில் எப்போது தோன்றியது? ஆதிகாலம் தொட்டே இருக்கிறதா? அல்லது இடையில் வந்ததா? என்றொரு கேள்விஎழும்பும்.



ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் அங்கிங் கெனாதி படி எங்கும் பிரகாசமாய் வியா பித்திருந்த சைவம் இடத்திற்குஇடம் ஏற்பட்ட சில மாறுபாடுகளால் வடக்கிலும், கன்னட தேசத்திலும் தனி பெயரோடு தனிக் கொள்கையோடு இன்று இருந்தாலும் சைவத்தின் மூலக் கொள்கைகளை சிந்தாமல் சிதறாமல் தமிழகம் மட்டுமே வைத்துள்ளது எனலாம். சைவ சித்தாந்தத்தை தமிழர் களுக்கே உரிய தனிசொத்து என்று சொல்வதில் மிகப் பெரும் சிக்கல் ஒன்று உள்ளது. அது என்ன வென்றால் தமிழர்களின் மதம்மான சைவம் அதன் மூல நூல்கள் தமிழில் இல்லாமல் வடமொழியில் இருப்பதற்கு என்ன காரணம்?அப்படி யென்றால் இது தமிழருக்குறிய மதம் அல்ல என்ற சிக்கலை சிலர் எழுப்புகிறார்கள்.

சமஸ்கிருதத்தில் உள்ள வேதங்களும்,ஆகமங் களும் சைவ சித்தாந்தத்தின் ஆதார நூல்களாகும். அதாவது அந்த நூல்களில் தான் இந்த சித்தாந்தத்தின் முழுமையான கருத்துக்கள்

காணகிடக்கின்றது. வேதாகமங்கள் அனைத்தும் வடமொழியிலேயே இயற்றப்பட்டிருக்கிறது. என்பது நாம் நன்கு அறிந்த சங்கதிதான்.

தமிழரது தனித்தன்மையான தத்துவம் இது என்றால் இது தமிழில் எழுதப்படாமல் வடமொழியில் எழுதப்பட்டதற்கு என்ன காரணம் என்ற இக்கேள்விக்கு பலவகையான பதில்கள் தரப்படுகின்றன. அந்த பதில்கள் கூட ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக தோற்றம் தருகிறதே தவிர ஒற்றுமையான கருத்துக்களை தரவில்லை. அப்பதில்களை பார்ப்போம்.

தத்துவக்கருத்துக்கள் முதல்முதலில் சமஸ்கிருத்திலேயே உருவாக்கப்பட்டன. அவர்களில் ஒருசாராருடைய கருத்துக்களை தென்பகுதி மக்களான தமிழர்களும், எற்றுக் கொண்டனர். அதனால் வடமொழியில் இயற்றப்பட்ட ஆகம நூல்கள் சைவ சித்தாந்த பிரமாண நூல்களாயின. என்பது ஒரு பதில்

இன்னும் ஒரு விந்தையான பதிலை மறை மலையடிகள் கா.சு.பிள்ளை போன்றோர்கள் தருகிறார்கள். ஆதிகாலத்தில் வேதங்களும் ஆகமங்களும் தமிழில்தான் இருந்தன. ரிக், யஜுர், சாமம் அதர்வனம் போன்ற வேதங்கள் அதே பெயரிலேயே தமிழில் இருந்தது. இவற்றில் ஒன்றாகிய சாம வேதம் ராவணனால் பாடப்பட்டது. காலப்போக்கில் தமிழ் வேதங்கள் அழிந்துவிட்டன. வடமொழி வேதங்கள் மட்டுமே நிலைத்து நின்றன. எனவே அவைகளை தமிழர்கள் வேறு வழியின்றி பிரமாண நூல்களான கொண்டனர். என்பதே மேற்குறிப்பிட்ட அறிஞர்களின் கருத்துக்களாகும்.

ஏறக்குறைய இதே கருத்துக்களை மேலும் விருத்தி செய்து அதற்கு கண், காது, மூக்கு வைத்து சிலர் புதுமையான ஒரு கருத்தை உலாவவிட்டார்கள். வேதங்கள் உபநிஷதங்கள், ஆகமங்கள் ஆகியவைகள், தமிழில் மட்டுமே ஆதியில் இருந்தது.

பின்னர் அவைகளை வடமொழியில் சிலர் பெயர்தெழுதி மூலமான தமிழ் நூல்களை அழித்து விட்டனர். அசல் மறைந்து விட்டதனால் வடமொழி நகல்கள் மட்டுமே இன்று இருக்கிறது. என்றும் சொல்கிறார்கள்.

சற்று நடுநிலைமை உடையவர்கள் வேறு ஒரு கருத்தை முன்வைக்கிறார்கள். தமிழர்களின் சொந்தக்கருத்துகளான வேதங்கள் ஆகமங்கள்



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

ஆகியவை பரத வருஷம். என்று அழைக்கப்படும் இந்திய துணை கண்டம் முழுவதுமுள்ள மக்கள் அறிந்து கொள்வதற்காக வடமொழியில் தமிழ்ச்சான்றோர்களால் இயற்றப்பட்டது. என்றும் கூறுகிறார்கள்.

இவைகளையெல்லாம் பார்க்கும் போது நமக்கு குழப்பம் தான் மிஞ்சும். ஆகவே இக்கருத்துக்களை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு, வேறொரு முடிவிற்கு நாம் வரலாம்.

சமஸ்கிருதம் என்பது அன்னிய மொழி அதற்கும் தமிழருக் கும் எந்தவித தொடர்பும் கிடையாது. அது யாரோ ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருடைய பாஷை அந்த இனத்தினர் எல்லாவிதத்திலும், தமிழருக்கு முற்றிலும் மாறு பட்டவர்கள் என கருதினால்தானே வடமொழியில் எழுதப்பட்டது ஏன்? தென்மொழியில் எழுத படாதது ஏன் என்றெல்லாம் கருத்துக்கள் உருவாகும்.

சமஸ்கிருதம் என்பது தனி ஒரு இனத்திற்கு சொந்தமானது அல்ல. அது பாரத தேசம் முழுமைக்கும் பொதுவான சொத்து. தமிழர்களும், பாரத தேசத்து மக்கள் தான் மற்றைய இந்திய மக்களுக்கு சமஸ்கிருதத்தில் எவ்வளவு உரிமை உண்டோ அதே உரிமை தமிழர்களுக்கும் உணடு. எனவே வடமொழி என்பதும் தமிழர்களது மொழிதான்.

எனவே தான் அந்த மொழியில் ஆகம நூல்கள் எழுதப்பட்டிருக்கிறது என்ற சிந்தனை வருமானால் எந்த சிக்கலும் எப்போதுமே வராது. வருங்கால தலைமுறையும் நம்மைப்போல் வேண்டாத மொழிச்சண்டையில் ஈடுபடாமல் அமைதியாக வாழ்வார்கள்.

வேதங்கள். ஆகமங்கள் என்ற வார்த்தைகளை நாம் பலமுறை பயன்படுத்துகிறோம். இதில் வேதம் என்ற வார்த்தைக்கு முழுமையான அறிவு என்ற பொருள் உள்ளது நம்மில் பலருக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் ஆகமங்கள் என்ற வார்த்தையின் உண்மைப்பொருள் நிறையபேருக்கு தெரியவில்லை. என்பது உண்மையாகும். எனவே ஆகமம் என்ற வார்த்தையின் அர்த்தத்தை புரிந்துகொண்டு மேலே சென்றால் நமக்கு பலவிதத்திலும் நன்மை உண்டு.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்
**போன்: 09442426434**



# ஆன்மிக உலகின்
# முதல் இலவச
# இணைய இதழ்

**இதுவரை வெளிவந்த**
**அனைத்து இதழ்களையும்**
**கட்டணமின்றி**

aanmeegamalar.com
aanmeegamalr (app)-ல்
படித்து பயன்பெறலாம்

**சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு**

**கொரானாவை விரட்டுவோம்**

# எல்லா ஆசைகளையும் திருப்திப்படுத்தும் ஆசை

அன்பு குருதேவர் அருளுகிறார்: "இறைவனின் கீர்த்தி மகத்தானது. அவன் உண்மையாக உள்ளான், அத்துடன் அவனை இப்பிறவியிலேயே காணமுடியும். மக்களின் இதயங்களில் பல பிரார்த்தனைகள் ஸ்ரீ பொருளுக்காக, புகழுக்காக, ஆரோக்கியத்திற்காக ஸ்ரீ மற்றும் எல்லா விதமான விஷயங்களுக்காகவும் உள்ளன. ஆனால் இறைவனின் இருப்பை வேண்டுகின்ற பிரார்த்தனைதான், மக்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் முதலிடம் வகிக்க வேண்டும். நீங்கள் அமைதியாகவும், உறுதியாகவும் வாழ்க்கைப் பாதையில் முன்னேறும்பொழுது, இறைவன்தான் உங்களை மனநிறைவடையச் செய்யும் ஒரே நோக்கமாகவும் ஒரே இலக்காகவும் இருக்கிறான் என்ற தெளிவுநிலைக்கு வந்தாக வேண்டும்; ஏனென்றால் இதயத்தின் ஒவ்வொரு ஆசைக்கான விடையும் இறைவனிடத்தில்தான் உள்ளது."

"உங்களுடைய சொந்த முயற்சியால் மிக அவசரமான விருப்பத்தை நிறைவேற்ற இயலாததை நீங்கள் காணும்பொழுது, இறைவன்பால் திரும்பிப் பிரார்த்திக்கின்றீர்கள். ஆக நீங்கள் செய்யும் ஒவ்வொரு பிரார்த்தனையும் ஓர் ஆசையைக் குறிக்கின்றது. ஆனால் நீங்கள் இறைவனைக் கண்டுவிட்டால், எல்லா ஆசைகளும் மறைகின்றன. அத்துடன் பிரார்த்தனைக்கு ஒரு தேவையும் இல்லை. நான் பிரார்த்திப்பதில்லை. அப்படிக்கூறுவது வினோதமாகத் தென்படலாம். ஆனால் உங்கள் பிரார்த்தனையின் பெரும் இலக்கு (இறைவன்) எந்நேரமும் உங்களுடன் உள்ளபொழுது, நீங்கள் பிரார்த்தனை செய்யவேண்டிய தேவை இனி இல்லை. இறைவனுக்கான விருப்பம் அல்லது பிரார்த்தனை நிறைவேறுவதில் சாசுவதமான பேரானந்தம் அடங்கியுள்ளது."

மேலும் அவர் தொடர்கிறார்: "வாழ்க்கையின் நோக்கத்தைப்பற்றிய குறிப்பிட்ட சில தவறான கருத்துக்களால் உலக ஆசைகள் உண்டாகின்றன. இப்பூவுலகு நம் வீடல்ல. சாத்திரங்கள், நாம் இறைவனது குழந்தைகள், அவனுடைய பிரதிபிம்பத்தில் படைக்கப்பட்டவை என்றும், மேலும் நாம் நமது மூலத்திற்குத் திரும்ப வேண்டும் என்பது இறை சித்தம் என்றும் நமக்குக் கூறியுள்ளான். மனிதன் புரிந்து கொள்ளாதது எதுவென்றால், அவன் தனது மூலமான இறைவனிடம் திரும்பச் சென்றாலொழிய அல்லது செல்லும்வரை முடிவற்ற ஆசைகளை பூர்த்தி செய்ய அவன் பாடுபடவேண்டியுள்ளது என்பதாகும். அதைப்பற்றிச் சிந்தியுங்கள். ஆசைகளைக்கொண்டுள்ளதை மனிதன் தவிர்க்க முடியாது. மேலும் அவைகளைக் கொண்டுள்ளது பாவமாகாது; ஆனால் இறைவனிடம் திரும்பவேண்டும் என்ற உன்னதமான ஆசையின் நிறைவேற்றுதலுக்கும் பெரும்பாலான மனித ஆசைகள் இடையூறு செய்கின்றன. ஆகவே அவை மனிதனின் சந்தோஷத்திற்கு ஊறுவிளைவிக்கின்றன. அவன் இறைவனை விரும்பி, அவனை அடையும்வரை தனக்கு இன்பம் தருமென நம்புகின்ற வேறு எதற்காகவாவது தொடர்ந்து ஏங்கிக்கொண்டே இருப்பான். ஆனால் இறைவனை அடைந்தவனுக்கு எல்லா ஆசைகளும் உடனடியாக நிறைவேறுதல் தானாவே நிகழ்கிறது."

"இருவகையான ஆசைகள் உண்டு. அவை இறைவனைக்காண நமக்கு உதவுபவை மற்றும் அவனைக் காண்பதற்குத் தடையாக இருப்பவை. உதாரணமாக உங்களை ஒருவர் தாக்கும்போது. நீங்கள் பதிலுக்கு அவரைத்தாக்க நினைக்கின்றீர்கள். ஆனால் அந்த விருப்பத்தை உன்னதமான அன்பெனும் சக்தியைப் பிரயோகித்து வெல்லும்போது, நீங்கள் இறைவனைக் காண்பதற்கு உங்களுக்கு உதவக்கூடிய செயலை செய்கிறீர்கள். எல்லா ஆசைகளும் தெய்வீக முறையில் பூர்த்தி செய்யப்படவேண்டும். அவைகளை லௌகீக முறையில் நீங்கள் பூர்த்தி செய்ய முயலும்பொழுது உங்கள் இன்னல்களை நீங்கள் பெருக்கிக்கொள்ள மட்டுமே செய்கிறீர்கள். ஒவ்வொரு ஆசையையும் நீங்கள் இறைவனிடம் அர்ப்பணிக்கக் கற்கும்பொழுது, உங்களுடைய நல்ல ஆசைகள் நிறைவேற்றப்படுவதையும், தீய ஆசைகள் வெல்லப்படுவதையும்

119
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

www.aanmeegamalar.com

இறைவன் கவனித்துக்கொள்வான். உங்களுடைய மனச்சாட்சியைவிடவும், உங்களுடைய நல்ல ஆசைகளின் தெய்வீகத்தன்மையைவிடவும் பெரியதான ஒரு பாதுகாப்பு இல்லை. உங்களுக்குள் உள்ள இறைவனின் முழு ஸ்ரீ பரிபூரண பிரதிபலிப்பான உங்கள் ஆன்மாவை மட்டும் நீங்கள் கண்டுவிட்டால் உங்களுடைய சகல ஆசைகளும் நிறைவேற்றப்படுவதைக் காண்பீர்கள்! இதை அடைந்த பிறகு, அந்த இறையுணர்வு நிலையில் வேறெந்த பேறும் பெரிதாக மாட்டாது; இந்த முழு உலகமுமே உங்களுக்கு அளிக்கப்பட்டாலும்கூட, நீங்கள் பாதிக்கப்படமாட்டீகள்; புகழ்ச்சி உங்களை குதூகலப்படுத்தாது. தவிர நிந்தனையும் உங்களைப் புண்படுத்தாது. உங்களுக்குள் உள்ள இறைபேரானந்தத்தை மட்டுமே நீங்கள் உணர்வீர்கள்,” என்கிறார் மதிப்பிற்குரிய குருதேவர்.

## நிறைவேற்றப்படாத ஆசைகளின் அபாயம்

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: “ நிறைவேற்றபடாத ஆசைகள் இதயத்துள் தங்கி இருக்கின்றன. அவற்றிற்கு இடம் கொடுத்து வைத்திருப்பதில் என்ன தீமை? இது தான் ஒவ்வொரு ஆசையும் நல்ல அல்லது தீய அல்லது இரண்டும் கலந்த குறிப்பிட்ட சக்திகளைக் கொண்டுள்ளது. நீங்கள் இறக்கும்போது தேகம் அழிந்து விட்டாலும் அந்த சக்திகள் இறப்பதில்லை. இவை மனோமாத்திரைகளாக உங்கள் ஆத்மா எங்கு சென்றாலும் அதைப்பின்தொடர்கின்றன. நீங்கள் மறுபிறவி எடுக்கும்போது, அவை நடத்தை சுபாவங்களாக வெளிப்படுகின்றன. இவ்வாறாக குடிகாரனாக இறந்த ஒருவன் மறுபிறவி எடுக்கும்போது குடியில் ஈடுபடும் மனப்போக்குடையவனாக இருக்கின்றான்; குடிப்பதற்கான ஆசையை அவன் வெல்லும்வரை அது அவனுடன் தங்கியிருக்கின்றது. மிகச்சிறிய ஒரு குழந்தையின் நடத்தைகூட அதன் முற்பிறவியின் குறிப்பிட்ட குணநலன்களை வெளிப்படுத்து கின்றது. சில குழந்தைகள் பயங்கரமான கோபாவேச முள்ளவையாகவும், இன்னும் சில சிடுசிடுப்பானவை யாகவும் இருக்கின்றன. இறைவன் அவர்களை அந்த வகையில் படைக்கவில்லை. சென்ற பிறவிகளின் நிறைவேற்றப்படாத ஆசைகள் அவ்வகை மனோரீதியான சுபாவங்களை ஏற்படுத்தி உள்ளன. இதன் காரணமாக ஆன்மாவானது இறைவன் வடிவத்தில் படைக்கப்பட்டிருந்தாலும், ஏதோ வேறுபட்ட ஒன்றாகத் தோன்றுகிறது. உங்களுக்குள்ளே உள்ள இறைவனின் வடிவம் கோபத்தாலோ அல்லது அச்சத்தாலோ இந்த வாழ்வில் குலைக்கப்பட்டால் அத்தகைய நடத்தைக் குறைவான குணங்களை இப்பிறப்பிலே நீங்கள் வெல்லாவிடில், அவற்றுடன் நீங்கள் மறுபிறவி எடுப்பீர்கள்; இனிவரும் ஏதோ ஒரு பிறவியில் அவற்றை நீங்கள் வெல்லும்வரை துன்பம் விளைவிக்கும். இவ்வகையான மனோபாவங்களை சுமக்க வேண்டியவர்களாவீர்கள். ஆகவே உங்களுடைய சகல ஆசைகளையம் இப்பொழுதே பூர்த்தி செய்துவிடுவதோ அல்லது வென்றுவிடுவதோ மேலானது. அவை உடனடியாகவும் எல்லா காலத்திற்குமாகவும் இறைவனின் சன்னிதானம் என்னும் உன்னத பேரானந்தத்தில் முடிவடைந்துவிடும்; ஆனால் அவனை அறியும்வரை உங்களுடைய வெல்லப்படாத ஆசைகள் உங்களை வேட்டையாட நீடித்திருக்கும்.”

“உங்களுடைய ஆசைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இரண்டு மார்க்கங்கள் உள்ளன. ஒன்று, பகுத்தறிவு மற்றும் விவேகம் அல்லது ஞானம் மூலம் இறைவன் மட்டுமே நிரந்தரமானதும், கலப்பற்றதுமான ஆனந்தத்தைத் தரவல்லவன் என்று உணர்ந்துகொள்வது; இரண்டாவது அவற்றை நிறைவேற்றுதல். பெரும்பாலானவர்கள் விஷயத்தில் ஆசைகள் ஆழ்மனதின் உள்ளே மறைந்துகிடக்கின்றன. அவை முடிந்துவிட்டன என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் அவை முடியவில்லை. நிச்சயமாக வாழ்க்கை ஒரு பெரிய மர்மம்தான். ஆனால் பகுத்தறிவு என்னும் கத்தியைக்கொண்டு அதை கூறுபோடும்போது, மர்மம் கலைந்துவிடுகிறது. ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து உங்களை நீங்களே அலசிப்பார்ப்பீர்களானால், நிறைவேற்றப்படாத பல ஆசைகள் உங்களுக்கு இருப்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். அவை, நீங்கள் வாழ்நாள் முழுவதும் எடுத்துச்செல்லும் அபாயகரமான கிருமிகளைப் போன்றவை; நீங்கள் எங்கு சென்றாலும் இந்தப் பிறவியிலும் சரி, அல்லது இனி வரும் பிறவியிலும் சரி, அவை உங்கள் கூடவே வரும்.”



மேலும் அவர் தொடர்கிறார்: "இப்பிறவியிலேயே எல்லா அபாயகரமான ஆசைகளையும் விவேகத்தின் மூலம் அழித்து விட்டு, உங்களுடைய நல்ல ஆசைகளை நிறை வேற்றுவதில் கவனம் செலுத்துவதே மிகச்சிறந்த மார்க்கமாகும். தற்கொலை செய்துகொள்வதற்கோ, அல்லது ஏதேனும் தீமையைச் செய்வதற்கோ நீங்கள் ஈர்க்கப்பட்டால் அத்தகைய ஆசைகளிலிருந்து இப்பொழுதே விடுபடுங்கள். நீங்கள் இறைவனின் வடிவில் படைக்கப்பட்ட அவனது ஒரு குழந்தையென்று உங்களை நீங்களே நம்பவைத்து, உங்களுடைய மகிழ்ச்சியற்ற மனோபாவங்கள் மற்றும் தேகரீதியான பழக்கங்கள் ஆகியவற்றைக் கடந்து செல்லுங்கள். அதிகமாக பற்றற்று இருங்கள். இந்த முறையில் நீங்கள் வெல்லலாம். விவேகத்தின் மூலம் நீங்கள் புலன்களை வெல்ல முடியும். விவேகம்தான் ஆசையை எரிக்கும் தீ."

**சிறிது நேரம் அமைதியாக அமர்ந்து உங்களை நீங்களே அலசிப்பார்ப்பீர்களானால், நிறைவேற்றப்படாத பல ஆசைகள் உங்களுக்கு இருப்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். அவை, நீங்கள் வாழ்நாள் முழுவதும் எடுத்துச்செல்லும் அபாயகரமான கிருமிகளைப் போன்றவை**

"ஒருவரது அவசியமில்லாத தேவையற்ற 'கழிக்கப்பட்ட சாமான்களை' மேல்மாட அறையில் சேர்த்து வைத்து, எப்பொழுதாவது ஒருமுறை வீட்டை நன்றாக துப்புரவாக்குவது பொதுவான ஒரு வழக்கம். இதேபோல் என்றோ ஒரு நாள் உங்களுக்கு, பெரும் தொல்லையைத் தரக்கூடிய தீங்கிழைக்கும் சக்தி வாய்ந்த அனேக ஆசைகள் உங்களுடைய அடித்தள மன அறையில் மறைந்து கிடக்கின்றன. ஆகவே உங்களை நீங்களே ஆராய்வது முக்கியமானதாகும். ஒரு வேளை நீங்கள் வெறுப்புமிக்க அல்லது சிடுசிடுப்பான அல்லது கோபமுடைய ஒருவராக இருக்கக்கூடும். அப்படியானால் இந்த சேகரித்து வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட குணாதிசயங்கள் உங்களுடைய சொந்த கடந்தகால நடத்தையின் விளைவாகும். 'தேவையற்ற தட்டுமுட்டு சாமான்கள்' உள்ள உங்கள் மன அறையை சுத்தம் செய்வதற்கு நீங்கள் தீவிரமாக உருப்படியான, ஆக்கபூர்வமான, அன்பான செயலில் ஈடுபடவேண்டும்."

இன்றைய உலகம் பலகொடிய நோய் மற்றும் பிரச்சனைகளாகின்ற பெருங்கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் ஆசைதான். ஆசைகளை ஒழித்தால் மட்டும்தான் மேலே கூறிய அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். ஆசைகளை ஒழிப்பதற்கு ஒரே வழி இறைவனை தொடர்பு கொள்வதேயாகும். இறைவனை தொடர்பு கொள்வதற்கு ஒரே வழி 'தியானம்' ஒன்று மட்டும்தான்.

மனதின் ஆழத்தில் ஒளிந்திருக்கும் நிறைவேற்றப்படாத ஆசைகள் எல்லாம் அபாயகரமானது. அவற்றை வெல்லவேண்டும் என்கிறார் குருதேவர். மனதிற்குள் ஒளிந்திருக்கும் ஆசைகள் அனைத்தையும் வைராக்கியமென்ற கோடாலியால் வெட்டி அகற்றி மனதைத் தூய்மைப்படுத்தினால் மட்டுமே அவற்றை ஒழிக்கமுடியும். அதற்கு, இறைவனுடன் தியானத்தால் தொடர்பு கொண்டால் விவேகமெனும் இறை ஒளிதீபம் மனதில் ஒளிரத் தொடங்கும். அதன் பின்னர் எந்த ஆசையும் முளைக்காது; ஏற்கனவே இருந்த ஆசைகள் அனைத்தும் இறை ஞான நெருப்பில் எரிந்து சாம்பலாகிவிடும். இவ்வாறு ஆசைகளை வெல்லலாம். பலபிறவிகளிலுள்ள நிறைவேற்றப்படாத ஆசைகளும் இருக்கலாம்; இப்பிறவியிலுள்ள ஆசைகளும் இருக்கலாம். அவற்றையெல்லாம் விவேகமென்ற நெருப்பினால் எரித்து சாம்பலாக்கி ஆசைகளை வெல்ல வேண்டும் என்கிறார் நம் ப்ரிய குருதேவர். அவர் கூறுவதைக் கேட்கும்போது, அதாவது அவர் கூறியுள்ளதை எப்போது படித்தாலும் அவர் இப்போது கூறுவதைப்போன்றுதான் இருக்கிறது. குருதேவருடைய போதனைகளை படிக்கும்போது அவர் நம்முடன் நேரடியாகப் பேசுவதைப்போன்றும் நாம் அதைச் செய்யத்தான் வேண்டுமென்ற ஒரு தூண்டுதலுடனும் உள்ளன. இது உண்மையான குருதேவர் அல்லது, இறைவனுடன் இணைந்த குருதேவர், அல்லது இறைவன் 'உண்மை' என்பதை நிரூபிக்கின்றதை நாம் உணரலாம். இவ்வாறிருப்பதால்தான் ஆயிரத்தில் ஒருவருக்காவது இறைவனை அடையவேண்டும் என்ற எண்ணம் உதிக்கிறது. ஒருவர் மட்டுமல்லாமல் அனைவரும் இறைவனை அடையத்தான் வேண்டும். எனவே இறைபக்தர்கள் மற்றும் வாசகர்கள் எவருமே முயற்சியை கைவிடவேண்டாம் என எனது அன்பான வேண்டுகோளை விடுக்கிறேன்.



குருப்ரியா

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# கொள்ளையரால் சுருக்கப்பட்ட காசியும் கும்பாபிஷேகத்தால் விரிவாக்கமும்

இந்தியாவில் சிதைக்கப்பட்ட பல்வேறுகோவில்களின் வரலாறுக்கு சாட்சியமாக, கோவில்கள் எவ்வாறு சிதைக்கப்பட்டு கொள்ளையர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது என்பதற்கு காசிவிஸ்வநாதர் ஆலயம் ஒரு சான்றாக விளங்குகிறது.

பல்வேறு துணைக் கோவில்களையும், சிறு சிறு ஆலயங்களையும் கொண்டு, நேராக கங்கை நதியுடன் தொடர்பு கொண்டிருந்தகாசிவிஸ்வநாதர் ஆலயம் காலப் போக்கில் முகலாயப் படையால் சிதைக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வெறும் 2700 சதுர அடி பரப்பில் சுருக்கப்பட்டிருந்தது.

தற்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு காசி விஸ்வநாதர் ஆலயம் 5 லட்சம் சதுர அடி பரப்பில் பிரம்மாண்டமாக காட்சியளிக்கிறது.

கோவிலின் விரிவாக்கத்தின் போது பல சிறிய கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த சிறிய கோவில்களும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. காசி விஸ்வநாதர் தரிசனம் முடிந்த பிறகு இந்த கோவில்களையும் நம்மால் காண இயலும்.

முகலாயர்களின் படையெடுப்பின் போது சீரழிக்கப்பட்ட காசி விஸ்வநாதர் ஆலயம் இப்போது பழைய முக்கியத்துவத்தை பெறுகிறது. இந்த பிரம்மாண்டமான ஆலயம் டிசம்பர் மாதம் 13ம் தேதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் சாதுக்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தியாவிலுள்ள 12 ஜோதிர்லிங்கத் கோவில்களில் இருந்து அர்ச்சகர்கள் இந்த விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

இந்த பிரம்மாண்டமான நிகழ்ச்சிக்கு உலகெங்கிலும் இருந்து சிவ பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கும்பாபிஷேகத்திற்கு பிறகு ஒரு மாத காலத்திற்கு கோவிலில் உற்சவங்கள் நடக்கும் என்று உத்தரபிரதேச அரசு அறிவித்துள்ளது. சாதுக்களின் மாநாடு ஒன்றும் கும்பாபிஷேகத்திற்கு பிறகு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காசி விஸ்வநாதர் ஆலயத்தின் விரிவாக்கத்திற்காக சுமார் 400 வீடுகள் அரசினால் கையகப்படுத்தப்பட்டன.

புனர் நிர்மாணம் செய்யப்பட்ட இந்த ஆலயம் தற்போது இரண்டு லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்யும் அளவுக்கு பெரியதாக இருக்கும்.

600 கோடி ரூபாய் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படும் இந்த ஆலயத்தில், பக்தர்கள் தங்கும் வசதியும் மருத்துவமனை ஆகிய வசதிகளும் உள்ளன.

இ னி







ஆலயத்தில் இருந்து நேரடியாக கங்கை நதிக்கு செல்ல இயலும். கங்கா ஸ்நானம் முடிந்தபிறகு அங்கிருந்தே ஆலயத்தை பக்தர்கள் தரிசிக்க இயலும். வருடத்திற்கு ஏழு கோடி பக்தர்கள் விஸ்வ நாதரை தரிசிக்க காசி வருகிறார்கள். இப்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு விட்டதால் அதிக அளவு பக்தர்கள் கூடுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஆலயத்தில் இருந்து நம்மால் கங்கா நதியை இப்போது நன்றாகப் பார்க்க இயலும்.

காசி விஸ்வநாதருக்கு செய்யப்படும் அபி ஷேக தீர்த்தம் நேரடியாக கங்கா நதியில் கலக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த கோவில் புனர் நிர்மாணப்பணியின் போது பல நூற்றுக்கணக்கான சிறு சிறு ஆலயங்களை மண் மற்றும் சுவர்களால் மறைக்கப்பட்டு அவை கட்டிடமாக மாற்றி ஆக்கிர மிக்கப்பட்டிருந்தது, தோண்டத் தோண்ட காசி முழுவதும் ஆலயங்களால் சூழப்பட்டிருந்தது.

உலக மக்களே அதிர்ச்சி அடையும் அளவிற்கு காசியில் மட்டும் பல நூறு ஆலயங்கள் மிகப்பெரிய மோசடியால் மறைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் கொடுமை ஒருசில ஆலயங்கள் சிதைக்கப்பட்டிருந்தது.



# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



# பரிகாசிப்புக்கு உள்ளான மாலை புனிதமானதாக்கிய பெரியவா

சாதாரணமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் அவன். வயது பன்னிரண்டு அல்லது பதிமூன்று இருக்கலாம். ஐந்தாவதோ ஆறாவதோ படித்துக் கொண்டிருக்கலாம்.

மாநிறம், எண்ணெய் அதிகம் கண்டிராத தலை. தடிமனான அரை டிராயர்; கசங்கிப் போன மேல்சட்டைஞ் அரை டிராயரும் மேல்சட்டையும் என்ன நிறம் என்பதைப் பார்த்த மாத்திரத்தில் எவரும் சொல்லி விடமுடியாது. அழுக்கேறிப் போயிருந்தாலும் அந்த ஆடைகள் அவ்வப்போது துவைத்துத் தான் அணியப் படுகின்றன என்பதை அதைப் பார்க்கும் எவராலும் புரிந்து கொள்ள முடியும். நெற்றியில் ஒரு வளைந்த கீற்றாக – முறையே இல்லாமல் ஏனோ தானோ என்று விபூதி பூசப்பட்டிருந்தது. ஒருவேளை இங்கு கிளம்பி வருகிற அவசரத்தில் அவனது அம்மா இட்டு விட்டிருக்கலாம்.

தேர்வு காலங்களில் கிராமத்தில் இருப்பவர்கள் தெருமுனையில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குப் போய், ஒரு சின்ன கற்பூரத்தை ஏற்றி வைத்து, பேனாவை பிள்ளையார் பாதத்தில் வைத்து வழிபட்டு விட்டுப் பரிட்சை எழுதப் போவார்கள். இது ஒரு விதமான நம்பிக்கை. அதாவது இறைவன் அருளோடு தேர்வு எழுதப் போகிறோம் என்கிற ஒரு தைரியம் மாணவர்களுக்கு வரும்.

அது போல் இந்த சிறுவன் காஞ்சிபுரத்தில் வசிப்பவன் என்பதாலும், மஹா பெரியவாளின் சாந்நித்யம் பற்றி யாரோ சொல்ல – அவன் தகுதிக்கு ஏதோ கேள்விப்பட்டிருந்தாலும் இன்று தேர்வு எழுதப் போகும் முன் ஸ்ரீமடத்துக்கே வந்து விட்டான் போலிருக்கிறது.

விடிகாலை நேரத்தில் விஸ்வரூபதரிசனம் காண வந்திருந்த பக்தர்கள் பலரும் இன்னமும் நகராமல் அங்கேயே நின்றிருந்தபடி பெரியவா தரிசனத்தில் திளைத்திருந்தார்கள்.

இதைத் தவிர, காலை வேளையில் ஏராளமான பக்தர்கள் வேறு ஸ்ரீமடத்தில் குவிந்து விட்டிருந்தார்கள். நாம பஜனைகளும் சங்கர கோஷமுமாக ஸ்ரீமடமே பக்தி மணம் கமழஞ் அருள் நிரம்பிக் காணப்பட்டது.

இவ்வளவு கூட்டம் பெரியவா தரிசனத்திற் காகக்காத்து நின் றாலும், சிறுவனாகப் பட்டவன் வரிசையில் நின்று கொண்டிருக்கும் எந்த ஒரு பக்தரைப் பற்றியும் கவலைப் படாமல், ராஜபாட்டை போல் விறுவிறுவென்று



நடந்து மஹா பெரியவாளின் சந்நிதியை நெருங்கினான்.

முகத்தில் உற்சாகம் கொப்பளிக்க, பெரியவாளைப் பார்த்தபடியே நின்றான். அவனை எவரும் தடுக்கவில்லை. ஏதும் கேள்வி கேட்கவில்லை. காரணம் – அந்தச் சிறுவனின் ஆர்வத்தையும் பரபரப்பையும் பார்த்த பின் இயல்பான அந்த பக்திக்குத் தடை போட எவருக்கும் விருப்பமில்லை.

“மடத்துக்குப் போய் சாமியைக் கும்பிடணும்னா, அவருக்குத் தோதா ஏதாவது எடுத்துட்டுப் போகணும்” என்று அவனுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்களோ. தெரியவில்லை. தன் கையில் தொடுத்த ஒரு மாலையை வைத்திருந்தான். அந்த மாலையைப் பார்த்த பல பக்தர்களும் வெவ்வேறு விதமான உணர்ச்சிகளைத் தங்களுக்குள் வெளிப்படுத்திக்கொண்டு விமர்சித்துப் பேசினார்கள்.

சிலர் வியந்தார்கள்; சிலர் வெளியே ஏதும் பேச முடியாமல் தங்களுக்குள் கேலியாகச் சிரித்துக் கொண்டார்கள்.

பலரது விமரிசனத்துக்கும் கேலிச் சிரிப்புக்கும் உள்ளான அந்த மாலையில் அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா?

அது – துளசி மாலை!

அதுவும் துளசியை அடர்த்தியாக – கொத்துக் கொத்தாக வைத்துக் கட்டப்பட்ட மாலை இல்லை. தனித் தனி துளசி இலைகளைக் கோணாமாணா என்று – ஒரு முறை இல்லாமல் கோர்த்துத் தொடுக்கப்பட்டிருந்த மாலை.

ஒருவேளை அடுத்தடுத்து துளசி இலைகளை நெருக்கமாக வைத்துத் தொடுத்திருந்தால் அதில் இடைவெளி என்பதே தெரியாமல் போயிருக்கும். ஆனால் இந்தச் சிறுவன் தொடுத்துக் கொண்டு வந்திருந்த துளசி மாலையில் இடைவெளி அதிகம் தெரிந்தது. அதனால் பார்த்தவுடன் ’மாலை’ என்று சொல்வதற்கு எவருக்கும் வாய் வராது.

இதில் இன்னொரு அலங்கோலமும் வெளிப்பட்டது. அதாவது இறைவழிபாட்டிற்குக் கொண்டு செல்கிற துளசியைப் பெரும்பாலும் வாழைநாரில் தான் கட்டுவார்கள். ஆனால் இந்தச் சிறுவன் ஒரு சணலில் இந்த ’மாலை’யைக் கட்டி எடுத்து வந்திருந்தான். (வீட்டில் ஏதாவது பொருளைக் கட்டி வைத்திருந்த மூட்டையில் இருந்த சணலை மட்டும் பிரித்து எடுத்திருப்பான் போலிருக்கிறது). இது போன்ற காரணங்களால் சிறுவன் எடுத்து வந்திருந்த துளசி மாலையைப் பார்த்து சிலர் சிரித்தார்கள்.

ஆனால் பக்குவப்பட்ட சிலர், ”இந்த வயதில் இந்த அளவுக்கு பெரியவாளிடம் ஒரு பக்தி இருக்கிறதே வெறுங்கையோடு வரக்கூடாது என்கிற நாசூக்கு தெரிந்திருக்கிறதே” என்று நெகிழ்ந்தார்கள்.

ஒரு கட்டத்தில் பெரியவாளின் திருப்பார்வை அவன் மேல் விழுந்தது. ஒரு புன்னகையை உதட்டோரம் தவழ விட்டு, "அருகில் வா" என்பது போல் அவனுக்கு ஜாடை காட்டினார்.

விறுவிறுவென்று நடந்து முன்னுக்கு வந்தான்.

"என்ன?" என்பது போல் ஆச்சரியமான முகத்துடன் தலையை மேலும் கீழும் அசைத்து ரசனையாகக் கேட்டது அந்தப் பரப்ரம்மம்.

சிறுவன் சந்தோஷமானான். தனக்கு உரிய அங்கீகாரம் இந்த சந்நிதானத்தில் கிடைத்து விட்டது என்பதாக மகிழ்ந்தான்.

கையில் துளசி மாலையோடு பெரியவாளை இன்னும் நெருங்கி, அவரின் திருவடி அருகே இதை சமர்ப்பித்தான். பெரியவாளின் கைங்கர்யப் பணிக்காக அங்கே இருந்த சீடர் ஒருவர் அந்த துளசி மாலையை அங்கிருந்து எடுத்து வேறு இடத்தில் சேர்ப்பிப்பதற்காகக் குனிந்தார்.

சற்றே நிமிர்ந்து அந்த சீடரைப் பார்த்த பெரியவா, ’வேண்டாம்’ என்பது போல் வலது ஆட்காட்டி விரலை இடப்புறமும் வலப்புறமும் அசைத்து சமிக்ஞை செய்தார். சீடரையும்தள்ளி நிற்கச் சொன்னார். அந்த மாலையைத் தான் அகற்றுவதைப் பெரியவா விரும்பவில்லை என்பதைப் புரிந்து கொண்ட சீடன், நின்ற வாக்கிலேயே அப்படியே ரிவர்ஸில் நகர்ந்து கொண்டான்.

"எக்ஸாம் இன்னிக்கு இருக்கோ?” – சிறுவனைப் பார்த்துப் பெரியவா கேட்டார்.

இவ்வளவு பேர் கூடி இருக்கும் இடத்தில் தன்னைப் பார்த்துப் பெரியவா ஒரு கேள்வி கேட்கிறார் என்பது அந்தச் சிறுவனின் முகத்தில் ஏராளமான சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது. தவிர, தனக்குத் தேர்வு இருப்பதைப் பெரியவா எப்படிக் கண்டு பிடித்தார் என்கிற ஆச்சரியமும் அவன் முகத்தில். பிரகாசமானவன், “ஆமா சாமி, இன்னைக்கு சயின்ஸ்” என்று கூடுதல் தகவலையும் சொன்னான்.

”தொளசி மாலையை எனக்காகக் கொண்டு வந்தியோ?” என்று அவனைப் பார்த்துக் கேட்டு, அந்த மாலையைக் கையில் எடுத்தார்.

இப்படியும் அப்படியும் அதை ஆராய்ந்தார். தான் காணிக்கையாக எடுத்து வந்திருந்த மாலையைப் பெரியவா தன் கையால் எடுத்து விட்டார் என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே அச்சிறுவனுக்குப் பெருமை பிடிபடவில்லைஞ்

”எங்க வீட்டுலேயே துளசிச் செடி இருக்குஞ் அதுலேர்ந்து நானே பறிச்சுக் கட்டினேன்.”

அந்தப் பரப்ரம்மம் அவனைப் பார்த்துச் சிரித்தது. கூடி இருந்த திரளான பக்தர்களும் அடுத்துப் பெரியவா என்ன செய்யப் போகிறார் என்பதைக் கவனிப்பதில் ஆர்வமானார்கள். ஒரு க்ஷண நேரத்தில் இந்தச் சிறுவன் பெரியவரின் கவனத்தை இப்படிக் கவர்ந்து விடுவான் என்று அங்கிருந்த எவரும் எதிர் பார்க்கவில்லை. சிறுவன் மேல் பெரியவா செலுத்தும் கரிசனத்தைக் கண்டு, சீடர்களும் மடத்துச் சிப்பந்திகளும் கூட அதிசயப் பட்டுப் போனார்கள்.

அந்தத் துளசி மாலையை தன் கையில்எடுத்துக் கொண்டார். வலக்கரத்தால் அந்த மாலையை எடுத்துத் தன் தலைக்கு மேல் வைத்தார். என்ன புண்ணியம் செய்ததோ அந்தத் துளசி மாலை! பெரியவாளின் தலையில் அமர்ந்து கொண்டது. துளசி மாலை பெரியவா சிரசில் அப்படியே நின்றது. சுற்றிலும் நின்றிருந்த தன் பக்தர்களை இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்தார் பெரியவர். எல்லாப் பக்கமும் திரும்பிப் பார்க்கிற வேளையில் அவர் முகத்தில் ஒரு புன்னகை ததும்பியது. "இந்தக் கோலத்தில் நான் எப்படி இருக்கேன்? இந்த மாலை நன்னா இருக்கா?" என்று பெரியவா கேட்பதாக எல்லோ ருக்கும் பட்டது.

பெரியவாளுக்கு சமர்ப்பிக்க வேண்டி பக்தர் கள் வாங்கி வந்திருந்த எத்தனையோ மலர் மாலைகள் அவருக்கு முன்னால் – சற்றும் மணம் குறையாமல் – மலை போல் குவிந்திருந்தன. ரோஜா, மல்லிகை, சம்பங்கி என விதம் விதமான மலர்களைக் கொண்டு மிகவும் நேர்த்தியாகத் தொடுக்கப்பட்டிருந்த மாலைகள் அவை. ஆனால், அனைத்தையும் விட்டு விட்டு, ஒரு ஒழுங்குமுறையே இல்லாத, ஒரு மாலைக்கு உரிய எந்த விதமான இலக்கணத்திலும் சேராத, சாதாரண சிறுவன் கொண்டு வந்த துளசி மாலை ஏனோ பெரியவாளுக்குப் பிடித்து விட்டது. தானே அதை ஸ்வீகரித்துக் கொண்டார்.

'இதுதான் பக்தி' என்பதை அங்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் உணர்த்தும் விதத்தில், 'இந்த மாலையை அணிந்திருக்கிற நான் எப்படி இருக்கேன்?' என்பதாக அனைவரையும் பார்த்தாரோ? எத்தனையோ மலர் மாலைகள் இருந்தும் அன்பின் மிகுதியால் – ஆர்வத்தின் வெளிப்பாடாகத் தொடுத்துக் கொண்டு வரப்பட்ட இந்தத் துளசி மாலை என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது என்பதைப் பகட்டான பக்தர்களுக்கு உணர்த்துகிறாரோ?

பக்தி என்றால் என்ன என்பதைப் பற்றிப் பெரிதும் படிக்காத, கேட்காத இந்தச் சிறுவன் தன் செய்கையால் அங்கிருந்த அனைவருக்கும் பெரியவரின் அருட்செயலின் மூலம் உணரச் செய்து விட்டான். செல்வச் செழிப்பில் திளைக்கும் எத்தனையோ பக்தர்கள் குவிந்திருக்கும் இந்த சந்நிதானத்தில் தான் அன்புடன் எடுத்து வந் திருக்கும் ஒரு துளசி மாலைக்கு இவ்வளவு மரி யாதையா என்று சிறுவன் திகைத்துப் போனான். அவன் விழிகளில் லேசாக ஈரம் ததும்பியது. சரேலென்று தரையில் விழுந்து பெரியவாளை நமஸ்கரித்தான். எழுந்து நின்றான். சுமார் பத்து நிமிடங்கள் கழித்துத் தான் அந்தத் துளசி மாலையைத் தன் தலையிலிருந்து எடுத்துக் கீழே வைத்தார் பெரியவா. புன்னகை அரும்ப அந்த சிறுவனை ஆசீர்வதித்தார். கல்கண்டும் குங்குமமும் கொடுத்தார்.

தன் தலையில் வைத்திருந்த மாலையை அருட் பிரசாதமாக அவனிடமே கொடுத்தார். அதன் அருமை தெரிந்தோ தெரியாமலோ பய பக்தியுடன் வாங்கிக் கொண்டான். எந்த ஒரு மாலையைப் பார்த்துப் பரிகசித்துத் தங்களுக்குள் விமர்சித்துக் கொண்டார்களோ, அந்த பக்தர்கள் இப்போது நெகிழ்ந்து போனார்கள். அவர்களின் பரிகாசிப்புக்கு உள்ளான மாலை இப்போது புனிதம் பெற்று விட்டது.

மாலையைப் பெற்றுக்கொண்டு வெளியேறும் அந்தச் சிறுவனிடம் இருந்து, "குழந்தே, அதில் இருந்து ரெண்டு துளசி தளங்களைப் பிய்ச்சு எங்ககிட்ட தாயேன். அதுபெரியவாபிர சாதம்" என்று கெஞ்சும் குரலில் கேட்டனர். அப்படிக் கேட்டவர்களுக் கெல்லாம் துளசி இலைகளைப் பிய்த்துக்கொடுத்து விட்டு, "எக்ஸா முக்கு டயமாச்சு. ஸ்கூல்ல பெல் அடிச்சுடுவாங்க.." என்று சொல்லி விட்டான் ஒரே ஓட்டம்! இன்று சயின்ஸ் தேர்வாயிற்றே!



# சிந்தனை வடிவம் மிகவும் முக்கியமானது

உயிர்களின் பிறப்புச்சுழற்சி என்பது வெகு அழகான ஒரு இயற்கையின் தன்மையே. வந்த மனிதனே வந்து கொண்டிருக்கிறான். ஒரு மனிதனைப் போலவே மற்றொரு மனிதனும் அப்படியே பிறந்து வருகிறான் என்பதே அழகு. வேற்றுமை இல்லாத இந்த அழகிய உருவச்சுழற்சியின் தன்மையைப் பார். இதற்கு தான் இயற்கை என்று பெயர். இயற்கையின் இரண்டாவது பெயரே வடிவ அமைப்புகளின் அழகிய பிறப்புச்சுழற்சி என்று பெயர். பிறப்புச்சுழற்சியின் முதல்நிலை உயிர். இரண்டாவது கட்டமே தனித்தனியாக தொடர்ந்து வருகின்ற குறிப்பிடப்பட்ட உடம்பின் வடிவங்கள். இதை கவனித்தால் போதும்.

❖❖❖

இயற்கை சுழற்சி என்றால் என்ன? பிறப்புகளின் வடிவச்சுழற்சி என்றால் என்ன? தத்துவத்தில் இரண்டும் ஒன்றுதான் என்றாலும் ஒன்று இயற்கையின் நிலை அதுவே உயிர். இரண்டாவது உயிர்கள் எடுக்கும் அதனின் தனித்தனி வேலை என்ற கர்மாக்களின் விதி அமைப்பு. உயிர் ஒன்று என்றாலும் ஓணானும், மனிதனும் வேறு. அது அதுவாகவே பிறக்கும். இவன் இவனாகவே பிறப்பான். இச்சுழற்சி இரண்டு சக்கர வண்டிகளின் சுழற்சி போன்றது. ஒரு சைக்கிள் சென்று கொண்டிருக்கும்போது பல நிலைகளையும் ஊர்களையும் அது கடந்து செல்லுகிறது. அதுபோல இயற்கை சுழற்சியில் வந்து வந்து போகின்ற பல பிறப்புகளின் உயிர் சுழற்சி பல அற்புத நிகழ்ச்சிகளையும் வேறு வேறாக கண்டு வருகிறது. இதில் அதிசயம் என்றால் எல்லா உயிர்களின் வாழ்க்கையில் தோன்றுகின்ற பற்பல நிகழ்ச்சிகளும் இயக்கங்களும் வேறு வேறாக இருந்தாலும், பலப்பலவாக இருந்தாலும் அவைகளும் ஒரு பிறப்பிற்கும், மற்றொரு பிறப்பிற்கும் மத்தியில் ஏற்படுகின்ற சுழற்சிகளைப் போன்று ஒன்றாகவே நிகழ்ந்து வருகின்றன. வேறு வேறாக நிகழ்ந்து வருவதைப் போன்று தோன்றுமே ஒழிய வித வித தோற்றங்கள் எல்லாம் ஒன்றே. உலகம் தோன்றிய காலத்திலிருந்து இப்படியே நடந்து வருகின்றது. இதற்கே சுழற்சி என்று பெயர்.



❖❖❖

சுழற்சியின் பிரத்தியேகமான விளக்கம் என்ன? சுழற்சிக்குள் அகப்பட்டு கொண்டு இருக்கின்ற இயற்கையின் உணர்ச்சியும் அனுபவமும் அனைத்து உயிருக்கும் ஒன்றாகவே இருக்கும். குறிப்பாக சொல்லப்போனால் சீதோஷ்ணத்தன்மையின் உணர்ச்சி, பாலுணர்வு, பசியுணர்ச்சி இவையனைத்தும் ஒன்றாகவே இருக்கும். மனிதனுக்கு மட்டும் சிந்தனையின் உணர்ச்சியும், அறிவின் உணர்ச்சியும் சற்று வேறாக இருக்கும். ஒவ்வொரு பிறவிச்சுழற்சியிலும் பல மனிதர்களின் பிறவிச்சுழற்சிக்கு அப்பால் ஒரு சிந்தனை சுழற்சி கொண்ட மனிதர்களின் சமுதாயத்தில் சிலரின் அறிவுச்சுழற்சியில் மட்டும் சிறிது பரிமாணச்சிந்தனையின் அறிவாற்றல் தனியே விளங்கும். இது உயிர்களின் பற்பல ஜென்மங்களுக்குப் பிறகு தோன்றுகிறது. அதுகூட ஒரு சிலரின் சுழற்சியில் மட்டும்தான் நிகழுகிறது. இந்த சிந்தனை வடிவம் மிகவும் முக்கியமானது. இதற்கே பேரழிவு என்று பெயர். ஒவ்வொரு பிறவிக்கும் ஒரு சிறப்பான சுழற்சி ஏற்படக்கூடும். பிரகிருதி என்று சொல்லக்கூடிய ஐந்து பூதங்களுக்கு தன்னிச்சையாய் ஒரு இயக்கம் என்பது அவைகளுக்கே கிடையாது. ஆனால் அவைகள் ஒவ்வொரு நிமிடத்திற்கு நிமிடம் இந்த சுழற்சி என்ற வேகத்தை தள்ளிக்கொண்டு போகிறது. விஞ்ஞானத்தின் மூலம் என்ற வித்தே இத்தன்மைதான். சுழற்சி என்பது உலகில் நிகழவில்லையானால் உலகில் முறைப்படுத்தப்பட்ட கல்வி என்ற



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

•••

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

விஞ்ஞானக்கல்வியே வந்திருக்காது. இதுமட்டுமா? பிரபஞ்சத்தில் பிறப்பு இறப்பு உயிர் என்பவைகளே தோன்றி இருக்காது.

❖❖❖

மேற்கண்ட முக்கியக் குறிப்பினிடையில் உயிர் என்பது முற்றிலும் பஞ்சபூதத்திலும், வேறு எந்த தத்துவத்திலும் சம்பந்தப்படாத ஒரு பெரும் சக்தியாகும். இந்த உயிரை தோற்றுவிக்கும் சக்திக்கே ஒரு தனிச்சுழற்சி இயற்கையாய் தனியாகவே இருக்கிறது. அச்சுழற்சிக்கு உயிர்ச்சுழற்சி என்றும் அடுத்த சுழற்சிக்கு பிறப்ப அல்லது உருவங்களை தருகின்ற சுழற்சி என்றும், மூன்றாவது சுழற்சிக்கு மரணச்சுழற்சி என்றும் பெயர். இம்மூன்றையும் ஆராய்ச்சி செய்வது மிக அற்புதமாகும். ஆனால் மனிதன் இதில் ஈடுபடவே இல்லை.

❖❖❖

தங்கள் பிறப்பு சுழற்சியை இரண்டாக தனிமைப்படுத்தி வீட்டீர்கள். இவைகளுக்கு காரணமான உயிர்ச்சுழற்சியையும், உயிரையும், உயிருக்கு வேண்டிய உயிர்ப்பையும் தருகின்ற சக்திக்கு வேறு சுழற்சி என்று சொல்லி அதை பிரத்யேகமாக்கி விட்டீர்கள். அவ்வண்ணம் ஆயின் முதற்சுழற்சியிலிருந்து பிறப்புக்கு எப்படித் தொடர்பு? பிறப்பில் அதற்கு என்ன தொடர்பு? பிறப்புக்குள் அதற்கு என்ன தொடர்பு? பிறந்த பின் அதற்கு என்ன தொடர்பு, பிறப்புடன் என்ன தொடர்பு? மரணம், மரணத்திற்கு அப்பால், பிறவியே எடுக்காததற்கு முன்பு அச்சக்திக்கு என்ன தொடர்பு என்பதை விளக்குங்கள்.

❖❖❖

ஒவ்வொன்றாய் கவனி. பிறந்தபின் அல்லது பிறப்பு ஏற்பட்ட பின் பிறப்புக்குள் இருப்பது ஒரே மாதிரியாய் பிறந்து பிறந்து வருகின்ற ஒரே சக்தியே ஒரு சுழற்சி. இதற்கு மட்டுமே பிறப்புச்சுழற்சி என்று பெயர். இதைத்தான் விஞ்ஞானம் விந்துக்களை அலசி ஆராய்ந்து வெளியிட முடியும். முன்பின் தொடர்புகளை வெளியிட முடியாது. அதற்கு விஞ்ஞானம் விளக்கமாய் பிறக்கவே இல்லை. சொன்ன கருத்திற்குள் உலகில் ஏராளமான பிறவிகள் மனிதனுக்கு மட்டும் உள்ளன. மனிதனாக என்று மட்டும் என்று கொள்க. இதைத்தவிர பற்பல உயிர்களுக்கு பற்பல விதமான ஒரேவித வடிவச்சுழற்சிகள் உள்ளன. எல்லா உயிர்களும் ஒன்று என்றாலும் பற்பல வடிவங்களை எப்படித் தாவித் தழுவுகிறது என்பதை எவராலும் சொல்ல இயலாது. இதை கடவுள் மட்டுமே அறிவான். உலகம் இதை உணர வேண்டும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க







# aanmeegamalar.com







## இணையதளத்தை பார்க்கவும்









# பக்தரின் கடன் தீர்த்த அம்பாள்

அந்த தேவி உபாசகர் ஒரு முறை, செல்வந்தர் ஒருவரிடம் பணம் கடன் வாங்கி, குறிப்பிட்ட காலத்தில் திருப்பி தருவதாக பத்திரம் எழுதி கையொப்பமும் இட்டிருந்தார்.

ஆனால் அவரால் குறித்த காலத்தில் கடனை திருப்பி தர இயலவில்லை! ஒரு நாள் அவர் பூஜை யறையில் அம்பிகையை தியானித்தவாறு பூஜையில் ஆழ்ந்திருந்த அக்கணம்.

கடன் கொடுத்த அந்த செல்வந்தர் அவர் வீட்டு வாசலில் வந்து அவர் பெயரை சொல்லி அழைக்க. அந்த தேவி உபாசகர் வெளியே வராததால். கோபம் கொண்ட செல்வந்தர் அவரை வாயில் வந்தபடி திட்டி கூச்சல் போட. ஆரம்பித்தார்!

அப்போது உள்ளிருந்து அந்த தேவி உபாசகரின் மனைவி வெளியே வந்து "உங்களுக்கு பணம் தானே வேண்டும்?. கூச்சல் போடாதீர்கள்! அரை நொடியில் பணத்துடன் வருகிறேன்"

மிடுக்காக சொல்லி விட்டு வேகமாக அங்கிருந்து விரைந்தவள், சொல்லி வைத்தாற்போல் அரைநொடி யில் வந்தாள், ஒரு சிறு பை சகிதம்.

பின் புன்னகையுடன் அந்த பையை அவரிடம் நீட்டியவாறே, "இதோ பாருங்கள். இந்த பையில் நீங்கள் கடனாக கொடுத்த பணமும் அதற்குண்டான, வட்டியும் உள்ளன!

பூஜை முடிந்ததும் நீங்கள் அவர் கையி னால் பிரசாதம் பெற்றுக் கொண்டு, பின் இந்த பத்திரத் தையும் அவரிடமே கொடுத்து விடுங்கள்!" புன்னகை மாறாத முகத்துடன் சொல்லி விட்டு அந்த அம்மாள் உள்ளே செல்ல.

செல்வந்தரும் பை, பத்திரம் சகிதம் வீட்டு திண் ணையிலேயே அமர்ந்து கொண்டார்.சற்றைக் கெல்லாம் பிரசாத தட்டுடன் வெளியே வந்த அந்த தேவி உபா சகர், அங்கே அமர்ந்திருந்த செல் வந்தரை கண்டு விய ப்பு மேலிட,






"அடடே...உங்களை கவனிக்கவில்லை... மன்னியுங்கள்!'' பிரசாத தட்டை நீட்டிய வாறு மெல் லிய குர லில் பேசியவரை பேச விடவில்லை அந்த செல்வந்தர். 'முதலில் இந்த பத்திரத்தை வாங்கி கொள்ளுங்கள்!"

அவரின் வார்த் தைகள் கேட்டு தேவி உபாசகருக்கு ஏகத் துக்கு ஆச்சரியம்!. புருவம் முடிச்சிட, "நான் இன்னும் உங்கள் கடனை அடைக்கவில்லையே?"

'பரிதாமாக கூறியவரை புன்னகை யுடன் ஏறிட் டார் செல்வந்தர்; உங்கள் மனைவி சற்று முன்பு வந்து மொத்த கடனையும் அடைத்துவிட்டு, பத்திரத் தையும் உங்களிடம் கொடுக்க சொன்னார்!"

ஆச்சரியத்தில் ஆழ்ந்த தேவி உபாசகர், பின் மனைவியை அழைத்து, "நீ இவரது கடனை அடைத்ததாக கூறுகிறாரே உண்மையா?"

என்று வினவ அந்த அம்மையாரோ திகைப்புடன், "அய்யோ ...நான் பூஜையறையில் உங்களுடன் தானே இருந்தேன்...?..இது எப்படி சாத்தியம்?" என்று அரற்றிய அக்கணம்.

பூஜையறையிலிருந்து ஒரு அசரீரி!

"நான் தான் பணம் கொடுத்தேன்!" குரல் கேட்டு பூஜையறைக்கு அனைவரும் விரைய, அங்கே அம்பி கையின் உருவத்தை தவிர வேறு எதுவும் இல்லை!

இப்போது சக லமும் புரிந்து போயிற்று அந்த தேவி உபாசகருக்கு; கடனை அடைக்க, தன் மனைவி உருவில் வந்தது சாட்ஷாத் அம்பிகையே என்றுணர்ந்த அவரின் கண்களில் இப்போது தாரை தாரையாய் கண்ணீர்! அருகே திக்பிரமையுடன் அவரது மனைவி! உங்கள் மேன்மை தெரியாமல் தவறாக பேசி விட்டேன் மன்னியுங்கள்!" கண்கள் பனிக்க, செல்வந்தர் அவரின் கால்களில் விழுந்தார்!

அந்ததேவி உபாசகர் வேறு யாருமில்லை லலிதா சஹஸ்ர நாமத்திற்கு பாஷ்யம் எழுதிய பாஸ்கரராயர் தான்!

அவரின் வாழ்வில் நடந்த உண்மை சம்பவம் இது! தஞ்சை மாவட்டம் திருவாலங்காட்டுக்கு அருகே, காவேரி ஆற்றங்கரையில் வசித்தவர் இவர்!

தஞ்சாவூர் மயிலாடுதுறை மார்க்கத்தில், பாஸ்கர ராயபுரம் என்று ஒரு ஊர் இவர் பெயராலேயே இருக்கிறது!

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# 18 படிகளின் அற்புத பயன்கள்

சபரிமலை ஐயப்பனை தரிசிக்க காடு, மலை களைக் கடந்தாலும், சபரிகிரி வாசனிடம் தஞ்சம் அடைய, பதினெட்டுப் படிகளாக திகழும் பதினெட்டு தத்துவங்களைக் கடந்தால்தான் ஐயனை அடைய முடியும் என்று உணர்த்தவே, சபரிமலையில் 18 படிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அந்தவகையில் பதினெட்டு படிக ளின் தத்துவம்!

**முதல் படி:** பிறப்பு நிலையற்றது, நாம் செய்யும் நன்மைகளும், தீமைகளும் நமதுபுண்ணிய, பாவங்களை நிர்ணயிக்கும் என்ற உண்மையை உணர்ந்து, இறையருளால் முக்தி அடைய வேண் டும் என்ற ஆத்ம உணர்வினை அளிக்கிறது. இதுவே விஷாத யோகமாகும்.

**இரண்டாம் படி:** சாங்கிய யோகம், பரம் பொருளை குருவாக உணர்ந்து அவரிடம் ஆத்ம உபதேசம் பெறுவது.

**மூன்றாம் படி:** கர்ம யோகம், உபதேசம்மட்டும் போதாது. மனம் பக்குவம் அடைய வேண்டும். அதா வது, பலனைக் கருதாமல் கடமையைச் செய்யும் பக்குவத்தை மூன்றாம்படி உணர்த்துகிறது.

**நான்காம் படி:** ஞான யோகம், பாவ, புண்ணி யங்களைப் பற்றிக் கவலைப்படாமல், எதன் மீதும் பற்றின்றி பரமனை அடையும் வழியில் முன்னேறும் பாதையைக் காட்டுவது

**ஐந்தாம் படி:** சன்னியாச யோகம், நான், எனது என்ற சிந்தனை இன்றி, எல்லாவற்றையும் துறந்து, இறைச் சிந்தனை ஒன்றையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதி செயல்படும் வழியினைக் காட்டுகிறது

**ஆறாம் படி:** தியான யோகம், கடவுளை அடைய புலனடக்கம் மிக இன்றியமையாதது. ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, காது இவற்றை நமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து அவை இழுத்த இழுப்புக்குச் செல்லாமல் தடுத்து, இறைவனால் அளிக்கப்பட்ட ஐம்புலன்களையும் நல்லவிதமாக இறைச் சிந்தனையால் நிரப்பி நல் வழிப்படுத்தும் வழியினைக்காட்டவே ஆறாம்படி அமைந்துள்ளது

**ஏழாம் படி:** ஞானவிஞ்ஞான யோகம், அனைத் தும் பிரம்மமே என்ற உண்மையை உணர வைக்கிறது.

**எட்டம் படி:** அட்சர பிரம்ம யோகம், எப் போதும் இறைச் சிந்தனையில் மூழ்கி, வேறு சிந்தனைகளற்று இருப்பது.

**ஒன்பதாம் படி:** ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம், கடவுள் பக்தி மட்டும் இருந்தால் பயனில்லை; உண்மையான பக்தி, ஆன்மிகத்தை உணரவைத்து, ஏழையின் சிரிப்பில் இறைவனைக காண வைப்பது.

**பத்தாம் படி:** விபூதி யோகம், அழகு, அறிவு,



ஆற்றல் என எத்தகைய குணங்களைக் கண்டாலும், அதை இறைவனாகவே உணர்வது.

**பதினொன்றாம் படி:** விஸ்வரூப தரிசன யோகம், உலகில் ஆண்டவனையும் ஆண்டவனில் உலகத்தையும் பார்க்கும் மனப் பக்குவத்தைப் பெறுவது

**பன்னிரண்டாம் படி:** பக்தி யோகம், இன்ப துன்ப, விருப்பு வெறுப்பு, ஏழை பணக்காரன் என்றவேறுபாடுகளை நீக்கி, அனைத்திலும் சமத்துவத்தைக் காண வைக்கிறது.

**பதிமூன்றாம் படி:** க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவிபாக யோகம், எல்லா உயிர்களிலும் இறைவனே வீற்றிருந்து, அவ்வுயிர்களை இயக்குகிறார் என்ற உண்மை நிலையினை உணர வைக்கிறது.

**பதினான்காம் படி:** குணத்ரய விபாக யோகம், பிறப்பு, இறப்பு, மூப்பு ஆகியவற்றால் ஏற்படும் துன்பங்களைக் களைந்து இறையளுக்குப் பாத்திரமாவதை காட்டுகிறது

**பதினைந்தாம் படி:** புருஷோத்தமயோகம், தீய குணங்களை விட்டொழித்து, நற்குணங்களை மட் டும் வளர்த்துக் கொண்டு, நமக்குள் தெய்வாம்சத்தை அதிகரித்துக்கொள்ள வழிகாட்டுகிறது.

**பதினாறாம் படி:** தைவாசுரஸம்பத் விபாக யோகம், இறைவனது படைப்பில் அனைவரும் சமமானவர்களே என்ற உண்மை நிலையினை உணர்த்தி யாரிடமும் அகங்காரம் இல்லாமல் இருக்க வைக்க உதவுகிறது.

**பதினேழாம் படி:** ச்ரத்தாத்ரய விபாக யோகம், சர்வமும் பிரம்ம மயம் என்ற நிதர்சனத்தைப் புரிந்து கொண்டு பரபிரம்ம ஞானம்பெறுவதற்கு வழிகாட்டுகிறது.

**பதினெட்டாம் படி:** மோட்ச சன்னியாச யோகம், பதினெட்டு படிகளையும் படிப்படியாய் அடியெடுத்துக் கடந்து வந்தால்நம் கண் எதிரே காட்சி தரும் மணிகண்டப் பிரபு பேரொளியாய் தரிசனம் தந்து, நமது வாழ்வுக்கு வளம் சேர்ப்பார் என்பதே ஐயப்பனின் பதினெட்டு படிகள் நமக்கு உணர்த்தும்தத்துவமாகும்.



ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐந்து கோயில்கள், மூன்று மலங்கள் இவற்றைக் கடந்து மனமொன்றி வழிபட்டாலே ஐயப்பசாமியின் திருவருள் நம்மை வந்து சேரும் என்பதே 18 படிகளின் தாத்பர்யமாகும்.

# திருமந்திரம் உணர்த்தும் உடலியல்

அங்கிங்கெனாதபடி, நமக்கு உள்ளும்,நம்மைக் கடந்தும் எங்குமாகவும் இருந்துநம்மை இயக்குகின்ற இறைநிலையால் அளிக்கப்பட்ட இந்த உடல், ஆன்மா பயணிக்கக்கூடிய ஒரு வாகனம் என்பதை நாம் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். இறைவனிடமிருந்து வந்த நாம், மீண்டும் இறைவனைச் சென்றடையும்வரைப் பயணிக்க வேண்டிய பயணத்திற்குக் கருவியாக இருந்து நம்மைப் பயணிக்க வைப்பது இந்த உடல்தான். இத்தகைய உடலை வளரும் பொருள் என்று நாம் ஒப்புக்கொள்ளலாமே தவிர, நிலையான பொருள் என்று நம்மால் ஒப்புக்கொள்ள இயலாது. எனவே இந்த உடல் அழியும் தன்மை கொண்டது. அழியும் தன்மை கொண்ட நம்முடைய உடலை, நம் பயணம் முடியும்வரைப் பாதுகாக்கலாமே தவிர, அதன் மேல்ஆசைகொள்வது என்பது மிகப்பெரிய தவறு.



பிறவிக் கடலை நீந்துவதற்குக் கருவியாக இருக்கக்கூடிய இந்த உடல், எவ்வாறு இறைவனால் தோற்றுவிக்கப்படுகின்றது மற்றும் எந்தெந்தப் பொருட்களால் தோற்றுவிக்கப்படுகின்றது என்பது பற்றித் திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தில் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

பல்வேறு வகையான மட்பாண்டங்களைச் செய்கின்ற குயவன் தம்மிடமுள்ள மண்ணைப் பானையாகச் செய்வதற்குத் தகுதியுடையதாக மாற்றி, தன்னுடைய உள்ளத்தில் எண்ணியவாறு பல்வேறுவகையான பாத்திரங்களாக உருப்பெறச் செய்வான். இவ்வாறு குயவன் அந்த மட்பாண்டங்களைப் பலவாறு செய்வது, அவனுடைய நன்மைக்காக அல்ல. உலக மக்களின் பயன் பாட்டிற்காகவே அவன் அவ்வாறு செய்கின்றான். அத்தகைய குயவனைப் போல அவரவருடைய பாவ புண்ணியங்களைக் கொண்டு, பல்வேறு உடல்களைச் செய்து அதற்குள் உயிரை வைத்து இறைவன் செய்யும் தொழிலும் அவருடைய நன்மைக்காக அல்ல. உலக மக்கள் அனைவரும் இன்புற்று இருப்பதற்காகவே இவ்வாறு உடலை அமைத்து, அதனுள் உயிரை அடக்கும் பணியை இறைவன் மேற்கொள்கின்றார் என்பதை,

“குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோல்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே” (428)

என்ற பாடல் வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார் திருமூலர்.

குயவன் ஆக்கும் அழகிய பாத்திரம் போல உடலை அமைத்த இறைவன், அதில் உயிர்க் காற்றையும் மிகவும் நுட்பமாக அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பூக்களில் உள்ள

நறுமணத்தைக் காற்றானது எவ்வாறு உலகம் முழுதும் பரப்பி நிற்கின்றதோ, அதைப்போல கருவில் உருவாக்கிய உடலில், அவ்வுடல் இயங்குவதற்காக உயிர்க்காற்றை இறைவன் சேர்க்கின்றார் என்ற மூச்சுக் காற்று குறித்த உலக நியதியை,

"பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவந்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுவங்
கூவி அழுவிங் குறிகொண்ட போதே" (441)

என்ற பாடல்வழி உணர்த்துகின்றார்.

இவ்வாறு இறைவன் நமக்கு அளித்துள்ளஉடல் சாதாரணமானது அல்ல. பல்வேறு எழும்புகளைப் பொருத்தி, தசைகளை அதோடு சேர்த்து அமைத்து, வலிமையுடைய நரம்புகளால் இவற்றை இழுத்துக்கட்டி, இவை அனைத்தையும் தோலைக் கொண்டு மூடி, மிகவும் பக்குவமாக அமைத்துள்ளார். இவ்வாறு எழும்பும் தோலும் சேர்த்து இறைவனால் அமைக்கப்பட்ட உடலின் தன்மையை,

"இன்னப் பிறவி படைத்த இமறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை
முன்பிற் கொளுவி குடிகுவ தாமே" (418)

என்ற பாடல் வரிகளிலும் மேலும்,

"என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நன்பால் ஒருவனை நாடகின்றேடீன" (445)

என்ற பாடல் வரிகளிலும் விளக்குகின்றார் திருமூலர்.

இப்பாடலில் எழும்புகளால் நெருங்கப்பெற்று, நரம்பினைக் கொண்டு நன்கு கட்டி, தசையைக் குருதி நீரால் இணைத்து அமைத்துள்ளார் இறைவன் என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு மிகவும் நுட்பமாக உடம்பினைப் படைத்த இறைவன், உலகில் உள்ள பஞ்ச பூதங்களின் நிகழ்வுகளையும் நம்முடைய உயிரானது இந்த உடம்பின் வழி உணர்ந்துகொள்வதற்காக செவி, மெய், நோக்கு, நாக்கு, மூக்கு என்னும் ஐந்துவகையான பொறிகளை உடம்பினுள் அமைத்துள்ளார். இறைவனின் இத்தகைய திருச் செயலினைத் திருமூலரோ,



"பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலன்ஐந்தும்
பிண்ணத்தின் ஊடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் தமர்ந்திடுந் தானே" (450)

என்ற திருமந்திரப் பாடல் வரிகளில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

தாய், தந்தை ஆகிய இருவருடைய சேர்க்கையால் உருவாகும் இந்த உடல் சார்ந்த கூறுகளை விளக்கும் திருமூலர், ஆண் பெண் இருவரில், ஆண் விடுகின்ற மூச்சுக்காற்றினால், பிறக்கின்ற குழந்தையின் உடலில் ஏற்படும் குறைபாடுகளையும் மிகமிக நுட்பமான முறையில் விளக்கிக் கூறுகின்றார்.

ஆணினுடைய மூச்சுக் காற்று அளவில் குறைந்தால் பிறக்கும் குழந்தை உடலளவில் குறுகியதாகக் காணப்படும். அம்மூச்சுக்காற்றே நெடுந்தொலைவு ஓடி இளைத்தவன் மூச்சுக் காற்றைப் போல இளைத்துக் காணப்பட்டால் பிறக்கும் குழந்தையின் உடம்பு முடமாகும். ஆணினுடைய மூச்சுக்காற்று இடையில் தடைபட்டால் பிறக்கும் குழந்தையின் உடல் கூனாகும் என்று ஒரு மருத்துவரைப் போல திருமூலர் விளக்கிக் கூறுவதை,

"பாய்கின்ற வாயு குறையிற்
குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின்
முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற்
கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லை
பார்க்கிலே" (464)

என்ற பாடல் வரிகளில் உணர முடிகின்றது.



ப.கற்பகராமன்

தாய் தந்தை இருவரில் தாயின் வயிற்றில் மலம் துப்புரவாகக் கழியாமல் தங்கி இருந்தால் பிறக்கும் குழந்தை மந்தமாகப் பிறக்கும். அதேபோல சிறுநீறு மிகுந்திருந்தால் பிறக்கும் குழந்தை ஊமமையாகும். இரண்டும் மிகுதியாக இருக்குமாயின் பிறக்கும் குழந்தை குருடாகப் பிறக்கும் என்று, சென்ற பாடலில் தந்தையின் மூச்சுக்காற்று பற்றி விளக்கிய திருமூலர், தற்போது தாயின் உடலை வைத்து குழந்தையின் உடல் அமைப்பை இறைவன் உருவாக்குவார் என்ற இறை தத்துவத்தை,

"மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே" (465)

என்ற பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

தாய் தந்தை இருவரும் இணையும்போது வலது மூக்கின் வழியாக மூச்சு வந்துகொண்டிருந்தால் ஆண் குழந்தை பிறக்கும். இடது மூக்கின்வழி மூச்சு வந்துகொண்டிருந்தால் பெண் குழந்தை பிறக்கும். மலக்காற்றாகிய அபானன் எதிர்த்து வருமாயின் இரட்டைக் குழந்தை பிறக்கும். மேலும், இரு மூக்கின் வழியாகவும் மூச்சுக்காற்று வந்தால் பிறக்கும் குழந்தை அலியாகப் பிறக்கும் என்ற உடலியல் தத்துவத்தை,

"குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்ததுவாகில்
குழவியும் இரண்டாம் அபனன் எதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலெ(466)

என்ற திருமந்திர வரிகளில் சுட்டுகின்றார். மேலும், தாய் தந்தை இருவரும் இணையும்போது. இருவருக்கும் வருகின்ற மூச்சுக்காற்று ஒரே மாதிரியாக அமைந்தால், திருவருளால் கருவுற்ற குழந்தையாக, நலமிகு வனப்புடைய குழந்தை தோன்றும் என்பதை,

"கொண்டநல் வாயு இருவருக்கும் ஒத்தொழில்
கொண்ட குழவியும் கோமள மாயிடும்" (467)

என்ற வரிகளின் மூலம் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

www.aanmeegamalar.com

நம்முடைய உடலையும், அதில் உயிரையும் எவ்வளவு கவனமாக கடவுள் படைக்கின்றார் என்பது இதன் மூலம் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இத்தகைய உடலைக்கொண்டு இறைவனுடைய திருவடி இன்பமாகிய பேரின்ப பேற்றினை நாம் அடையாமல், துளியும் பயனற்ற செயல்களைச் செய்துகொண்டு, இறைவனையே குறை கூறும் கீழான நிலையில் உள்ளோம் என்பதே வருத்தம் தருவதாக உள்ளது. இறைவனைத் தேடிச் செல்லவேண்டாம்.

ஏனெனில் இறைவன் தொலைந்துபோன பொருள் அல்ல. இறைநிலையானது, நம் அருகிலேயே, நம்மைச் சுற்றி, நம்மை நோக்கிய வண்ணமே உள்ளது. நாம்தான் அதை நோக்கிச் செல்வதை மறந்து, இறைநிலையை விட்டு வெகு தொலைவில் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

எனவே நம்முடைய மனம், சொல், செயல் மூன்றிலும் இறைவனை நினைத்து, உண்மையான, தூய்மையான செயல்களில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டால் மட்டுமே நாம் இறைவனை அடைந்து இன்புற்றிருக்க முடியும்.

– முனைவர் ப. கற்பகராமன்
MA.,MA.,MA.,M.Phil.,P.hD
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share



# சபரிமலையில் கல்லாக மாறிய கன்னிப்பெண்

சபரிமலைக்கு செல்லும் போது பந்தளம் கொட்டாரம் வாகா பகுதியில், விளக்குவாஞ்சி என்ற இடத்தில் இளையதம்புராட்டிகாவு என்ற கோவில் உள்ளது. மலைப்பிரதேசமாக இருப்பதால், இக்கோயில் சாலையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு கீழ்நோக்கி உள்ளது.

இக்கோவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே திறந்து விளக்கேற்றி வழிபாடு நடைபெறுகிறது.

இக்கோவிலில் ஒருகண்ணிப் பெண் இறைவனை வேண்டி கல்லாக மாறி, பிற்கால சந்ததியினர் அப்பெண்ணை இளைய தம்புராட்டிகாவு என்ற பெயரில் அம்ம னாக வழிபடுகின்றனர்.

அக்காலத்திலேயே இளம்பெண்கள்சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்ய சென்றதில்லை என்பதை நிருபிக்கும் வகையில் இந்த கோவிலின் தலவரலாறு அமைந்துள்ளது.

சரி வரலாற்றை பார்ப்போம்...

பாண்டிய வம்சத்தின் பந்தள நாட்டு அரசனான ராஜசேகரன் என்பவர் பம்பாதீரத்தில்

குழந்தையாக இருந்த ஐயப்பனை கண்டெடுத்தார். அவருக்கு குழந்தை இல்லாதமையினால் ஐயப்பனை வளர்க்க உத்தேசித்தார். அதன்படி ஐயப்பன் வரலாறு துவக்கமாக அமைந்தாலும் முடிவில் ஐயப்பன் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டு சபரிமலையில் யோக நிலையில் தியானம் செய்வதாக ஐதீகம்.

இந்த வரலாற்றின் படி பாண்டிய வம்சத்தை சேர்ந்த ராஜசேரகர அரசனுக்கு பின்பு வந்த சந்ததியினர் ஐயப்பன் என்ற பெயரை அடைமொழியாக வைத்தே ஆட்சி செய்து வந்துள்ளனர்.

அந்தவகையில்தான் கொள்ளைக்காரனாக இருந்த வாபர் என்ற இஸ்லாமியரை ஐயப்பன் நண்பனாக்கிக் கொண்டதாக வரலாறு திரிக்கப் பட்டது.

அந்த வம்சத்தில் வந்த, ஐயப்பன் என்ற குலப்பெயர் கொண்ட அரசனால் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உண்மையில் ஐயப்பனுக்கும் வாபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, ஐயப்பன் இருந்த காலகட்டத்தில் இஸ்லாமியர்களே கிடை யாது என்று வரலாற்று ஆய்வாளர்களின் நிருபிக் கப்பட்ட சான்றாகும்.

அதே சமயம் பல்வேறு நிகழ்வுகள் ஐயப்பனின் கதைகளில் மழுங்கடிக்கப்பட்டுள்ளதும் உண்மை. சபரிமலையைச் சுற்றி உள்ள சிறு சிறு கோவில்களின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், ஐயப்பன் கதையுடன் இணைந்த பல தகவல்கள் கிடைக்கும்.

மாற்று மத வளர்ச்சி, இந்து மத துவேஷம் போன்ற ஒருசில காரணங்களால் வரலாறு மறைக்கப்படுவது வேதனைதான்.

அவ்வாறு மறைக்கப்படும் ஒரு சிறு கோவிலின் வரலாற்றை பார்ப்போம்.

ராஜசேகர மன்னனின் வம்சத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் மன்னனாக முடி சூட்டிக்கொண் டது முதல் தங்களது குலதெய்வமான ஐயப் பனை குடும்பத்துடன் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் உள்ளது போன்று எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால், சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்ய சென்றால் திரும்புவதற்கு ஒருசில மாதங்கள் கூட ஆகும்.

இதனால் கன்னிப்பெண்களாக பூப்பெய்தும்




வயதில் இருக்கும் பெண்களை, சபரிமலைக்கு அழைத்துச் செல்வதை மன்னர் வம்சத்தினர் தவிர்த்து வந்தனர்.

இது நடைமுறையில் இருக்கும்போது, ஐயப்பனின் வம்சத்தை சேர்ந்த ஒரு மன்னரின் குடும்பத்தினர் சபரிமலை நோக்கி தங்கள் பயணத்தை துவக்கினர், குடும்பம் சகிதம் செல்லும் போது பாதி தூரத்தை கடந்தனர், இரவு பொழுதில் ஓரிடத்தில் தங்குவது சூரிய உதயம் ஆனவுடன் பயணம் என்ற வரைமுறையில் பல நாட்கள் காட்டுப்பாதையில் பயணத்தை தொடர்ந்தனர் மன்னர் குடும்பத்தினர்.

மன்னர், அரசி மற்றும் குழந்தைகள், பாதுகாவலர்கள் என்று மிகப்பெரிய கூட்டமாக பயணம் தொடரும்போது, யாரும் எதிர்பாராத விதமாக மன்னரின் உறவுக்கார சிறு பெண் வயது அடையும் பருவம் நெருங்கிவிட்டதை உணர்ந்தாள். விஷயத்தை, மன்னரும் அரசியும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தாலும், தாங்கள் மேற்கொண்ட பயணத்தில் கண்ணிப்பெண் இடையூராக இருப்பாளே என்று ஒரு பக்கம் துக்கமும் அடைந்தனர்.

இதை அறிந்த அப்பெண், மன்னனிடம்,

“நான் இக்காட்டுப் பகுதியிலேயே தங்கி விடுகிறேன்... நீங்கள் பயணத்தை தொடர்ந்து நமது குலதெய்வமான ஐயப்பனை தரிசித்து



வரும்போது உங்களுடன் இணைந்து கொள்கி றேன், அதுவரை நான் இங்கேயே இருக்கிறேன்" என்று சமாதானப்படுத்தி, அரசர் குடும்பத்தினரை அனுப்பி வைத்தாள்.

பயணம் எத்தனை நாளில் முடியும் என்பது யாருக்கும் தெரியாது.

நாட்கள் மெல்ல சென்றது. அந்தப் பெண் ணிற்கு காட்டுவிலங்குகள்மீது ஒருவித பயம் தொற்றிக் கொண்டது. உடனே இறைவனை நோக்கி தவம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். கடுமையான தவத்தின் பயனாக தன்னைத் தானே கல்லாக மாற்றிக் கொண்டு அந்த இடத் திலேயே தவயோக வாழ்க்கையை தொடங்கி விட்டாள்.

சபரிமலை பயணம் செய்துவிட்டு திரும்பிய அரசர் குடும்பத்தினர், அப்பெண்ணை விட்ட இடத்தில் சென்று பார்த்தபோது, அப்பெண் கல்லாக மாறி தெய்வ நிலை அடைந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

உடனே அங்கேயே அப்பெண்ணுக்கு ஒரு ஆலயத்தை நிர் மாணித்து, மலையாள மாதத்தின் துவக்க நாள் அன்று அப் பெண்ணிற்கு மிகச் சிறந்த விழா எடுத்து இன்று வரை கொண்டாடி வருகின்றனர்.

இன்றும் கன்னிப்பெண்கள் பலர் இந்த தம்புராட்டியை தங்கள் குலதெய்வமாகவே வணங்கிவருகின்றனர். இத்திருக்கோவிலை பந்தளம் கொட்டாரம் வாகா டிரஸ்ட் நிர் வகித்து வருகிறது. சபரிமலையைப் போன்று இத்திருக்கோவிலும் பந்தள மகாராஜா குடும்பத் தினர் வழிபடும் கோவிலாக திகழ்கிறது.

சபரிமலைக்கென்று ஒரு நியதியை வகுத்த முன்னோர்களின் வாக்கினை காப்பாற்றவும், ஐயப்பனின் யோக நிலை தியானத்திற்கு எந்தவித பாதிப்பும் வராமல் தடுக்க, தன்னைத்தானே கல்லாக்கிக் கொண்ட பெண் தெய்வத்தை, சபரிமலைக்கு செல்லும் வழியில் வாய்ப்பு கிடைத்தால் நாமும் வணங்கிவிட்டு செல்லலாம். மறைக்கப்பட்ட இந்த தம்புராட்டியின் வரலாற்றை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்.

ச.நடராஜன்,
தொடர்பு எண்:94442282033

# ஆன்மீக வழியில் அமைதி

ஒருவன் அதிகமான பணம், நகைகள் போன்றவற்றை வீட்டில் பீரோவில் பாதுகாப்பாக வைத்திருக்கிறான். ஆனால் அவற்றைப் பற்றி அவன் நினைத்து பெரும்பாலும் மகிழ்ச்சி அடைவதில்லை. அதற்குமாறாக அந்தப் பணம், நகைகள் போன்றவை திடீரென்று தன்னை விட்டுப் போய்விடுமோ என்ற பயமும் கவலைதான் அவனுக்கு அதிகமாக இருக்கும். அந்தப் பணம் நகைகள் அவனை விட்டு எதிர்பாராமல் திருடு போய்விட்டது என்று வைத்துக்கொள்வோம். அதனால் அவனுக்கு திருட்டு போய் விடுமோ என்ற மனதில் முன்பிருந்த பயம் கவலை இப்போது அவனை விட்டுப் போய் விடும். அவன் பீரோவில் இருந்த பணம், நகைகள் போன்றவை திருடு போய்விட்டதை பற்றி சிறிது காலம் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பான். திருடு போய் விட்டதை பற்றி மறந்து நாளடைவில் அவனாகவே மனதை சமாதானப்படுத்திக்கொண்டு தைரியமாக இருந்து விடுவான்.

அவன் வீட்டில் பீரோவில் பணம் நகைகள் போன்றவை இருக்கும்போது அவனிடம் முதலில் இருந்த மன அழுத்தம் பயம் கவலை போன்றவை அவை திருட்டு போன பிறகு அவனிடம் இருப்பதில்லை. தேர்வு எழுதிய ஒரு மாணவனுக்கு தேர்வு முடிவு அறியாத வரைக்கும் அதிகப்படியாக பயந்து கொண்டு மன அழுத்தத்துடன் இருந்துகொண்டு இருப்பான். ஆனால் அவன் தேர்வு முடிவு அறிந்த பிறகு அவனுக்கு வெற்றியோ தோல்வியோ எப்படி இருந்தாலும் தேர்வு முடிவுக்குப் பின் அவனிடமிருந்த முன்பு இருந்த பயம் மன அழுத்தமெல்லாம் அவனிடம் இயல்பாக குறைந்து விடும்.

ஒருவர் தன்னோட பெண்ணுக்கு வரன் தேடும்போது நல்ல வரனாக அமையவேண்டும் என்ற பயம் கலந்த எதிர்பார்ப்பு மன அழுத்தம் போன்றவை அவருக்கு இரவும்பகலும் அதிகமாக இருந்துகொண்டே இருக்கும். அவருடைய பெண்ணுக்கு அவர் விரும்பியபடி வரன் அமைந்து திருமணம் நல்லபடியாக முடிந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அதன்பிறகு பெண்ணுடைய வாழ்க்கை எப்படியிருந்தாலும் அவருக்கு முன்பு மனதில் இருந்ததுபோல் பயம் கலந்த மன அழுத்தம் கவலை போன்றவை இருப்பதில்லை. பெண்ணின் வரன் பற்றி எந்தவித பயமோ எதிர்பார்ப்போ இப்போது அவரிடம் இருப்பதில்லை. இதுதான் மனிதனுடைய மன இயல்பு என்று புரிந்து கொள்ள வேண்டும்.

சிலர் பெண்ணுக்கு வரன் அமையவில்லையே என்று கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். அந்த பெண்ணுக்கு வரன் பார்த்து திருமணம் முடிந்த பிறகு நாம் நினைத்ததுபோல் மாப்பிள்ளை அமையவில்லையே என்று வருத்தப்படுவார்கள். ஆனால் பெண்ணுக்கு வரன் அமையவில்லை என்று முன்பு மனதிற்குள்ளேயே கஷ்டப்பட்டு வருந்தியதுபோல் அப்போது அதிகமாக அவர் வருத்தப்படுவதில்லை அவருக்கு முன்பு இருந்ததுபோல் மனஅழுத்தமும் கவலையும் இருப்பதில்லை. இயல்பாகவே அவருக்கு ஓரளவு மனோபலம் அல்லது மனபக்குவம் வந்து விடும்.

நாம் ஆன்மீக வழியில் மேற்கொள்ளும் பலவிதமான விரதங்கள், தியானம் தவம், யோகாசனம் பஜனை போன்றவை எதற்கு என்றால் நமது மனோ சக்தியை வளர்த்துக் கொள்வதற்கு ஆகும். நமக்கு மனோ சக்தியை வளர்த்துக் கொள்ளக்கூடிய சாதனைகளை ஆன்மீக வழியில் பொறுமையுடன் தியானம் யோகாசனம் போன்றவற்றை விடாமுயற்சியுடன் செய்ய வேண்டும். நாள்தோறும் தியானம் செய்வதால் பிரபஞ்ச சக்தியைப் பெறலாம்

31



என்று சித்தர்கள் கூறியுள்ளனர். பிரபஞ்ச சக்தியைப் பெறுவதால் மன அழுத்தம் குறைந்து மன அமைதியைப் பெறமுடியும். அதற்கு ஆன்மீக வழியில் சென்று அமைதி வாழ்வை பெறுவதற்கு முயற்சியினை மேற்கொள்ளவேண்டும்.

தினமும் காலையில் மாலையில் அரைமணிநேரம் தவறாமல் தியானத்தினை மேற்கொண்டால் நமது மனம் அமைதி அடைந்து விடுவதை ஓரளவுக்கு நாம் உணர்ந்து கொள்வதற்கு முடியும். அதேபோல் மனிதனுக்கு மனக்கஷ்டம் ஏற்படும் போதெல்லாம் தியானத்தை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு அவன் கடைபிடிக்குபோது அவன் மனதிற்கு அவனை அறியாமல் ஒரு மன ஆறுதல் கிடைக்கும். பொதுவாக ஒவ்வொரு மனிதனிடமும் மனோ சக்தி இருக்கிறது. ஆனால் அது சிலரிடம் மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே நாம் விரதம், தியானம், யோகாசனம் போன்ற ஆன்மீகச் சாதனைகள் மூலமாக மனோ சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் மனோசக்தியை பெறுவதும் ஆன்மீக வழியில் மன அமைதி பெறுவதற்கு ஒரு வழியாகும்.

பொதுவாக மனிதன் நடைமுறை வாழ்வில் பொறுமை இல்லாமையில்தான் பலவிதமான துன்பங்களுக்கு ஆட்படுகிறான். சிலர் பொறுமையில்லாமல் உணர்ச்சி வசப்பட்டு பேசக்கூடிய வார்த்தைகள்தான் அவனுக்கும் மற்றவர்களுக்கும் மனக்கஷ்டம் போன்ற துன்பங்களால் பாதிக்கபடுகிறார்கள். எடுத்துக்காட்டாக அலுவலக நண்பர் ஒருவர் தன்னோட பணியாற்றும் ஒருவருக்கு பலவிதங்களில் தனிப்பட்டமுறையில் உதவி செய்து கொண்டிருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இனிய நண்பர்களாக அலுவலகத்தில் நல்லமுறையில் முழுமனதோடு ஈடுபாட்டுடன் பணியாற்றிக்கொண்டு இருப்பார்.

ஒருநாள் திடீரென்று அலுவலக நண்பர்களுக்குள் கருத்து வேறுபாட்டினால் ஒருவர் மற்றொருவரை பொறுமையிழந்து கோபத்துடன் பேசி விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனால் ஒரு நல்ல அலுவலக இனிய நண்பரின் உறவை அப்போது அவரையும் அறியாமல் இழக்கும்படி நிலை ஏற்பட்டு விடுகிறது. நமக்கு நன்மை செய்தவர்களிடம் பகைமை, வெறுப்பு போன்றவை ஏன் வருகிறது? என்று சிந்தித்துப் பார்த்தால் முக்கிய காரணம் பொறுமையின்மைதான்.

மனித நடைமுறை வாழ்வில் நம்பிக்கை என்றால் பொதுவாக ஒருவரை ஒருவர் நம்பிக்கையுடன் நடந்து கொள்வது ஆகும். ஒருவர் மற்றவர்கள் மீது அவர்களது செயல் சொல் ஆகியவற்றில் முழுநம்பிக்கை கொள்வது சிறந்த பண்பாகும். அதேபோன்று ஆன்மீகத்தில் நம்பிக்கை என்பது சற்று உயர்வானது. அது வேறுபட்டு காணப்படுவது. நமக்கு ஞானத்தைக் கொடுக்கும் கருவியாகிய ஆன்மீகத்தின் மீது முழு நம்பிக்கை வைப்பது ஆகும். ஆன்மீகத்தின் மீதும் ஆன்மீக வழியில் செல்லும் ஞானிகள் கூறும் தத்துவங்களின் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும். நம்பிக்கை கொள்வது என்ன என்று பார்த்தால் எந்தவிதமான சந்தேகம் கொள்ளாமல் நம்பிக்கையுடன் ஒருவர் கூறும் ஆன்மீகக் கருத்துகளை முழுமையாக நம்பி அதனைக் கடைபிடிப்பது என்று அர்த்தம் ஆகும். பொதுவாக நமது சிந்தனைகள் செயல்கள் எல்லாம் நேர்மறையாக இருக்க வேண்டும்.

நம்பிக்கை என்றால் மற்றவர்களிடம் விசுவாசமாக இருப்பது என்று பொருள்படும். வேதாந்த வாக்கியங்கள் உபநிடதங்களில் தத்துவ ஞானிகள் வார்த்தைகளில், சித்தர்கள் எழுதிய பாடல்களின் மீது முழுநம்பிக்கை கொள்ள வேண்டும். நாம் வேதாந்தம் உபநிடதங்களை நாமாக படித்தால் அதனுடைய நுட்பங்கள் பற்றி நன்கு விளங்காது. குருவின் மூலம் நாம் கேட்டால்தான் வேதாந்தம் உபநிடதங்கள் போன்றவற்றை நன்கு புரிந்து கொள்வதற்கு முடியும். வேதாந்தம், சாஸ்திரங்கள் போன்றவற்றை குருவின் மூலமாக அவர் கூறும் ஆன்மீக தத்துவங்களில் முதலில் நம்பிக்கைகொள்ள வேண்டும். அதன் பிறகு குரு கூறும் தத்துவங்களைக் கேட்டு, அதன்படி நடப்பதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

வேதாந்தம், சாஸ்திரங்கள், உபநிடதங்கள், போன்றவை சித்தர்கள் பாடல்கள் அனைவருக்கும் எளிதில் விளங்குவதில்லை. அவற்றைப்பற்றி தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்றால் அதன்படி நடக்க வேண்டுமென்றால் குருவின் துணை உதவி ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவை. எடுத்துக்காட்டாக இனிய பாடல்களை பதிவு செய்த ஒரு சி.டி. இருக்கிறது. அதிலிருந்து விசயங்களை அல்லது பாடல்களை போன்றவற்றை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் சி.டி. பிளேயர் என்ற ஒரு கருவி தேவைப்படுகிறது. அதேபோல் ஆன்மீகத்தைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கும் ஆன்மீக வழியில் யோகம், தவம் தியானம் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கும் கடைபிடிப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் குருவின் துணை அவசியம் தேவை.

ஆன்மீக குரு கூறும் கருத்துக்கள் அனைத்தும் உண்மையானதா என்பது குறித்து சிலருக்கு சந்தேகம் வந்து விடும். பொதுவாக குருவின் துணையில்லாமல் நாம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காணமுடியாது. சிந்தித்துப் பார்த்தால் ஆன்மீகத்தில் முன்னேறியவர்கள் எல்லாம் குருவின் மூலமாகத்தான் சித்தியடைந்து

இருக்கிறார்கள் என்பது தெரிய வரும். அவ்வாறு ஆன்மீக முன்னேற்றத்திற்கு குருவே நேரடியாக துணை இல்லாமல் இருந்தாலும் அவர்களின் மனதில் மானசீகமாக ஒரு குருவின் வழியில் அவர் கூறிய தத்துவங்களின் துணையுடன் ஆன்மீகத்தில் முன்னேற்றம் கண்டிருப்பார்கள்.

குரு நமக்கு ஆன்மீக வழியில் சிறந்த வழிகாட்டியாக இருப்பார் என்ற நம்பிக்கை அவர் மீது இருக்க வேண்டும். அவர் உபதேசிக்கும் ஆன்மீகக் கருத்துக்கள் மீதும் நாம் முழுநம்பிக்கை வைத்து அதன்படி செயல்புரிய வேண்டும். அதேபோல் வேதாந்தம், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றில் நம்பிக்கை இருந்தால் மட்டும் போதாது. அவற்றைப் பற்றி கருத்துக்களை எடுத்துக்கூறும் குருவின் வார்த்தைகளிலும் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். அவ்வாறு முழுநம்பிக்கையுடன் இருந்தால் மட்டும்தான் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண முடியும். ஆன்மீக குருவின் மூலம் அவர் உபதேசிக்கும் கருத்துக்களின்மீது நம்பிக்கை கொண்டால் நாம் விரும்பும் தேடும் மன அமைதி பெற முடியும்.

எடுத்துக்காட்டாக ஆன்மீக சம்பந்தமான ஒரு கதை. கள்ளங்கபடமற்ற படிப்பு அறிவற்ற ஒரு மீனவன் ஆற்றங்கரையில் நடந்து வந்து கொண்டிருந்தான். அப்போது ஒரு சாது ஆற்றில் குளித்துவிட்டு கரையில் அமர்ந்து கண்களை மூடி கைகூப்பிக்கொண்டு மனதிற்குள் மந்திரங்கள் ஓதியபடி இருக்கிறார். அவர் செய்வதையெல்லாம் அருகில் இருந்து பார்த்துக்கொண்டு வந்தான். ஒருநாள் மீனவன் அவரிடம் தயக்கத்துடன் ‘‘சாமி நான் இந்த வழியில் போகும்போதெல்லாம் நீங்க கண்ணை மூடி சும்மாவே உட்கார்ந்துகொண்டு



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

இருக்கீங்களே எதுக்கு சாமி’’ என்று கேட்கிறான். அதற்கு அவர் ‘நம்மையெல்லாம் படைத்த கடவுளை பார்ப்பதற்காக நான் தியானம் தினமும் செய்து வருகிறேன்‘’ என்று அமைதியாக பதில் கூறுகிறார்.

‘‘சாமி அப்படி என்றால் நான் கும்பிடும் மாரியாத்தாவை நேரில் பார்க்கலாமா?’’ என்று அந்த மீனவன் ஆவலுடன் கேட்கிறான்.

அவன் மாரியம்மனை பார்ப்பதில் ஆவலாகவும் உறுதியுடன் இருப்பதை அந்த சாது அறியாமல் ’’நீ ஆற்றில் இறங்கி கண்ணை மூடிக்கொண்டு மாரியாத்தா மாரியாத்தா என்று கூறிக்கொண்டு இந்த ஆற்றில் முழுகி எழுந்தால் அவள் காட்சி அளிப்பாள்’’ என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு சென்று விடுகிறார். மீனவன் அந்த சாதுவை குருவாக மனதில் எண்ணிக்கொண்டு அவர் கூறியபடியே மாரியாத்தா என்று கூறிக்கொண்டே அவனையும் அறியாமல் நடு ஆற்றுக்குப் போய்விட்டான். மீனவனின் உறுதிப்பாட்டை எண்ணி அவன் உயிரை காப்பாற்றும் பொருட்டு மாரியம்மன் அவனுக்கு காட்சி அளித்தாள். மீனவனின் உறுதிப்பாடு சாது கூறிய வார்த்தைகளின் மீது உள்ள அவன் கொண்டிருந்த நம்பிக்கைதான், அவனுக்கு மாரியம்மன் காட்சி அளித்தாள். ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைய விரும்புவர்கள் குருவின் மீது முழு நம்பிக்கையுடன் பக்தியுடன் இருக்க வேண்டும்.

ஞானம் மோட்சம் மன அமைதி போன்றவற்றை அடைய விரும்புவர்கள் குருவின் மீது முழுமையாக நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும் அவர் கூறக்கூடிய ஆன்மீகக் கருத்துக்களில் வார்த்தைகளில் தத்துவங்களில் மட்டும் நம்பிக்கை வைப்பது முக்கியமான


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

ஆன்மீகப் பண்பாடு பக்தி ஆகும். எந்த ஒரு செயல்பாட்டிலும் சிரத்தையுடன் இருப்பவன்தான் செயல்படுபவன்தான் ஞானத்தை அடைகிறான் என்று கீதையில் கிருஷ்ண பரமாத்மா போதிக்கிறார்.

பெரும்பாலும் ஆன்மீகத்தில் முதல் படியில் கால் வைப்பவர்களுக்கு சிரத்தை அல்லது நம்பிக்கை கொள்வதற்கு ஒருவிதமான பயம் அவர்களை அறியாமல் வந்து விடுகிறது. பொதுவாக அனைத்து சிறுகுழந்தைகளும் கள்ளங்கபடமில்லாமல் எல்லாரிடமும் சிரித்துப் பேசி அவர்கள் மீது அன்புடன் நம்பிக்கையுடன் இருக்கும்.

நாம் குழந்தைகளுக்கு விருப்பமான பொம்மைகளையோ மிட்டாய்களையோ விரும்பிக் கொடுக்கும்போது, எந்தவிதமான தயக்கமில்லாமல் பயப்படாமல் மகிழ்வுடன் அதனை வாங்கிக் கொள்ளும். ஆனால் இப்போதெல்லாம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்லது சொல்கிறோம் என்று நினைத்துக்கொண்டு, தங்கள் குழந்தைகளிடம் ‘எங்களைத் தவிர மற்றவர்கள் யார் என்ன கொடுத்தாலும் வாங்காதே’ என்று கூறி விடுகிறார்கள்

குழந்தைகளிடம் பெற்றோர்கள் எதிர்மறையாகக் கூறி நம்பிக்கையின்மையை அவர்களையும் அறியாமல் சிறுகுழந்தைகளின் மனதில் நன்கு பதியும்படி போதித்து விடுகிறார்கள். இயல்பாகவே அனைவரையும் நம்பிக்கொண்டிருக்கும் குழந்தைகளிடம் நம்பிக்கை இன்மை என்ற வேண்டாத குணத்தை நம்மையும் அறியாமல் போதித்து விடுகிறோம். அதனை அக்குழந்தைகள் மனதில் நன்கு பதிய வைத்து கொள்கிறார்கள். அதனால் அக்குழந்தைகள் எதிர்காலத்தில் யாரிடமும் நம்பிக்கை கொள்ளாமல் வாழ்க்கையில் பலவிதமான கஷ்டங்களையும் எதிர்கொள்ளக்கூடிய சூழ்நிலையும் சில நேரங்களில் ஏற்பட்டு விடுவதை நாம் காண்கிறோம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரிடமும் நம்பிக்கை என்ற குணம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியும். சிரத்தை என்பது மோட்சத்தை அடைய மன அமைதியை பெற விரும்பும் ஆன்மீக அன்பர்களுக்கு ஒரு இன்றியமையாத பண்பாடு ஆகும். சிரத்தையின் மூலமாகத்தான் ஞானத்தை அடையவோ வாழ்வில் அமைதி கொள்ளவோ முடியும். சிரத்தை என்ற பண்பாடு இல்லை என்றால் அவன் ஞானத்தை பற்றி அறிந்து கொள்வதற்கு முடியாது.

எடுத்தக்காட்டாக நம்பிக்கையை பற்றி கூறுவதென்றால் ஒருவன் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வேலை கிடைக்காமல் இருக்கிறான். அவன் தன்னோட சேர்ந்து கல்லூரியில் படித்த மாணவ நண்பனிடம் சேர்ந்து கூட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கிறான். அந்தக் கூட்டு வியாபாரத்தில் அவன் எதிர்பாராமல் நஷ்டம் அடைந்து விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்த வியாபாரத்தில் எதனால் நஷ்டம் அடைந்தது என்று அவன் ஆராயாமல், உடனே தன்னோடு கூட்டு சேர்ந்த நண்பனால்தான் வியாபாரத்தில் நஷ்டம் அடைந்து விட்டதாக எண்ணிக்கொள்கிறான்.

அதன்பிறகு அவனுடைய மனதில் அவனை அறியாமலே இனி யாரையும் நாம் எளிதில் நம்பக்கூடாது என்று அவன் மனதில் தவறாகப் பதிந்து விடுகிறது. அதனால் அவன் வாழ்க்கையில் நல்ல நண்பர்களையும், உறவுகளையும் இழக்கக்கூடிய நிலைதான் ஏற்படும் என்பதை அவன் அப்போது புரிந்து கொள்வதில்லை. ஒரு அனுபவத்தை வைத்து நாம் ஒரு முடிவுக்கு வராமல் அதனைப்பற்றி விருப்பு வெறுப்பு இல்லாமல் சிந்தித்துப் பார்த்தால் உண்மை நிலை என்னவென்று தெரிய வரும். ஒருவன் ஆராயாமல் எதிலும் அவசரமான முடிவு செய்வதும் தோல்வியை தழுவதோடு அவனுடைய மன அமைதியை இழக்க நேரிடும்.

கீதையில் கிருஷ்ண பரமாத்மா பதினேழாவது சுலோகத்தில் நம்பிக்கை சிரத்தையை பற்றி சாத்வீக சிரத்தை, ராஜசிச சிரத்தை மற்றும் தாமச சிரத்தை என நம்பிக்கையை பற்றி மூன்று வகையாகப் பிரிக்கிறார் நம்மை யார் உண்மையில் ஏமாற்ற நினைக்கிறார்களோ அவர்களிடம் வைத்துள்ள நம்பிக்கை தாமசமான சிரத்தை ஆகும். ஒருவர் மீது அலட்சியமாக அவரைப்பற்றி அவர் செயல்பாடுகளைப் பற்றி ஆராயாமல் நம்பிக்கை வைப்பது ராஜசிசமான சிரத்தை ஆகும்.

ஒருவர் மீதும் அவரின் வார்த்தையில் செயலில் நம்பிக்கையை உறுதியாக வைக்கின்றோமோ அந்த நம்பிக்கையானது சாத்வீகமான நம்பிக்கை ஆகும். எனவே நாம் ஒருவர் மீது அல்லது ஒரு பொருளின் மீது நம்பிக்கை வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சரியான இடத்தில் நம்பிக்கை வைக்கிறோமா என்பதை சிந்தித்து கவனித்து அவர்கள் மீதோ அந்தப் பொருளின் மீதோ சாத்வீகமான நம்பிக்கை வைக்க வேண்டும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Search
Categories
Home
Top charts
New releases
Apps
My apps
Shop
Games
Family
Editors' Choice
Account
Payment methods
My subscriptions
Redeem
Buy gift card
My wishlist
My Play activity
Parent guide
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
mobigoods
News & Magazines
Contains ads
This app is compatible with some of your devices
Installed
ஆன்மிகமலர்
aanmeegamalar
Subscribe
MONEY
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை


Google Play